# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 11 செவ்வாய்க்கிழமை (27.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 305




லெப். கேணல் திலீபன் மற்றும் கேணல் சங்கர் ஆகியோரின் நினைவு நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர்கள் இருவரின் திருவுருவப்படங்களுக்கு நேற்று மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினார்.

நல்லூரில் நேற்று இடம்பெற்ற தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் நினைவுதின நிகழ்வில் தியாக தீபத்தின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்படுகின்றது.

(செய்தி, படங்கள் 2ஆம், 3ஆம் பக்கங்களில்)



# இந்திய முறையில் அதிகாரப் பகிர்வு

# அதையும் ஆராய்கிறதாம் ஐ.தே.க.!

## இன்று உத்தியோகபூர்வமாக வெளியாகும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 27

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் வழிமுறைகளுள் ஒன்றாக இந்தியாவில் உள்ள அரசியல் முறைமை குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அக்கட்சி இன்று வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க இன்று கொழும்பில் ஐ.தே.கட்சி தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் வைத்து வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த நொச்சிகுளம் மக்கள் போராட முஸ்தீபு

வவுனியா, செப்.27

சொந்த இடத்தில் மீளக்குடியமரதம்மை ஒருவார காலத்துக்குள் அனுமதிக்காவிட்டால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா அலுவலகம் முன்பாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக வவுனியா கோதாண்டர் நொச்சிகுளம் கிராம மக்கள் எச்சரித்துள்ளனர். இது குறித்து கண்காணிப்புக் குழுவினருக்கு நேற்று அவர்கள் முன்னறிவித்தல் வழங்கியுள்ளனர்.

1999 ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் நொச்சிகுளம் மக்கள் இடம்பெயர்ந்தனர். அப்பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறிவித்துள்ளது. (ஒ-16-1)

## வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் மூலம் புத்துயிரூட்ட ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் முன்வைக்கும் யோசனை இது

சென்னை, செப்.27

இரண்டு வருடங்களுக்கு மேலாக ஸ்தம்பித்துப் போயிருக்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கு மாற்று இடைக்காலத் தீர்வாக, வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆட்சிமுறைக்கு புத்துயிர் ஊட்டி அதனை இயங்கச் செய்ய வேண்டும். தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளை தன்னகத்துடைய மாகாண சபை நிர்வாகமாக இது பரிணமிக்கவேண்

(16ஆம் பக்கம் பார்க்க)

## எம்மிடம் இருந்து பிள்ளைகளை பிரித்து தமிழினத்தை அழித்துவிட முடியாது!

### காணாமற்போனோர் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப்.27

எமது பிள்ளைகளை எம்மிடமிருந்து பிரித்ததன் மூலம் தமிழ்த்தேசிய இனத்தை அழித்துவிடமுடியாது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பொது மக்கள், பெற்றோர் பாதுகாவலர் சங்கம் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தங்களுடைய அரசின் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன எமது பிள்ளைகளுக்கு இதுவரை காலமும் என்ன நடந்தது என்ற விவரத்தை நீங்கள் எமக்குத் தரவில்லை. சகல அதிகாரங்களும் கொண்ட உங்களுக்கு இந்த நாட்டில் அதுவும் உங்களது பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட இந்தக் கொடூர நிகழ்வு தெரியாமல் போனதா? ஜனாதிபதியாகிய நீங்கள் இதுவரை காலமும் எமது கோரிக்கைக்கு செவிசாய்க்காது இருந்தமை தங்களுடைய பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது. வாருங்கள் மன்னிப்பை

(16ஆம் பக்கம் பார்க்க)

## கைதான போராளியை மனித உரிமைக்குழு சந்தித்தது

யாழ்ப்பாணம், செப்.27

காங்கேசன்துறை கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள கடற்புலிப் போராளியை மனித உரிமை ஆணைக்குழுவின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நாடு திரும்புகிறார் சந்திரிகா

கொழும்பு, செப்.27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது வெளிநாட்டு விஜயத்தை நிறைவுசெய்துகொண்டு இன்று நாடு திரும்பவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி அங்கிருந்து லண்டன் சென்று தமது பிள்ளைகளைச் சந்தித்தார். அவர்களுடன் சில நாள்களைக் கழித்த பின்னரே ஜனாதிபதி இன்று நாடு

(16ஆம் பக்கம் பார்க்க)

### வழக்கு சமயம் வெளிநாட்டில் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்த

# நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு கடவுச்சீட்டை சமர்ப்பிக்கும்படி ஆனந்தசங்கரிக்கு உத்தரவு

### தமிழர் கூட்டணித் தலைவர் விவகாரச் சர்ச்சை மீதான விசாரணை ஆரம்பம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக வீ.ஆனந்தசங்கரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கின் மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

இந்த வழக்கின் முன்னைய விசாரணைத் தினத்தின்போது நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருப்பதற்கு ஆனந்தசங்கரி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ அறிக்கை குறித்து எதிர்மனுதாரர்கள் சார்பில் சர்ச்சை கிளப்பப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட தினத்தில் ஆனந்தசங்கரி உண்மையாகவே வெளிநாட்டில்தான் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் கடவுச்சீட்டை அடுத்த தவணை நீதிமன்ற விசாரணையின்போது நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தியாகி திலீபன் நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி லெப். கேணல் திலீபனின் 18ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

**பிரதான நிகழ்வு**

குடாநாட்டில் பிரதான நிகழ்வு தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த இடமான நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் நல்லூர் இந்து விடுதிக்குப் பின்புறமாகவுள்ள தியாகி திலீபனின் நினைவாலயத்தில் தொடக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் பொதுச்சுடரினை சிவஸ்ரீ தனேஸ்வரக் குருக்கள், யாழ். மாநகரசபையின் கணக்காளர் நா.இராசநாயகம் ஆகியோர் ஏற்றினர். திலீபனின் திருவுருவப்படத்திற்கு கடற்புலி கப்டன் றொசானின் தந்தை வா.இரத்தினசிங்கம் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அதன் பின்னர் திலீபனின் திருவுருவப் படம், நல்லூர் வடக்கு வீதிக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு பொதுச்சுடரினை அ.பி.ஜெயசேகரம் அடிகளார், மௌலவி மொகிடீன் பிக்ஷை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் கனகசபாபதி ஆகியோரும் - தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் லெப். கீர்த்தியின் தந்தை சிவஸ்ரீ யோகேஸ்வரக் குருக்களும் ஏற்றினர்.

திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு.ராஜ்குமார் அடிகளார் ஏற்றினார்.

திலீபனின் நினைவுக் கல்வெட்டிற்கு வலி.தெற்குத் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.இலகுநாதன் மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து உண்ணாநோன்பினை பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. ஆரம்பித்துவைத்தார்.

உண்ணா நோன்பின்போது இடம்பெற்ற மேடை நிகழ்விற்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதியும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவருமான எஸ்.செல்வகுமார் தலைமை வகித்தார்.

திலீபன் உயிர்நீத்த நேரமான 10.32 மணிக்கு உண்ணாநோன்பு இருந்த மக்கள் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தினர்.

உண்ணாநோன்பின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் மௌலவி மொகிடீன் பிக்ஷை ஆகியோர் உரை நிகழ்த்தினர். பிற்பகல் ஒரு மணிக்கு நீராகாரம் வழங்கி உண்ணா நோன்பு முடித்துவைக்கப்பட்டது.

**தென்மராட்சியில்...**

தென்மராட்சியில் தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன. வர்த்தக பிரமுகர் ந.சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினைத் தேசிய எழுச்சிப் பேரவையின் தென்மராட்சிச் செயலாளர் க.சந்திரசேகரா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தைச் சேர்ந்த சி.கோகுலன், வணிகர்மன்றத் தலைவர் க.வேதநாயகம், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு. பாலச்சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஈகச்சுடரினை கரும்புலி மாவீரர் விநோத்தின் தாயார் யோகலிங்கம் பாக்கியம் ஏற்றிவைத்தார். திலீபனின் உருவப்படத்திற்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி உப அதிபர் பத்மகாந்தன் மலர்மாலை அணிவித்தார்.

அடுத்து சங்கத்தானை மணியம் குழுவினரின் வாத்திய அஞ்சலி இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்புரைகளை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன், தேசிய எழுச்சிப் பேரவையின் தென்மராட்சிப் பிரதேச செயலாள்ளர் சந்திரசேகரா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த வி.விஜியரூபன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ், சாவகச்சேரி வணிகர் மன்றத்தைச் சேர்ந்த வீ.மகாலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

**தீவகத்தில்...**

தீவகத்தில் நினைவு நிகழ்வு தீவகக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

எழுச்சிப்பேரவைச் செயலாளர் த. சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரன் டெனிஸின் சகோதரி திருமதி ரி.வசந்தியும் தேசியக் கொடியை மாவீரன் பூவிழியின் தந்தை சோ.இராசதுரையும் ஏற்றினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து நினைவுச் சுடரினை தேசிய எழுச்சிப் பேரவையின் தீவகப் பிரதேச செயலர் த.சத்தியதாசன் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு அன்னையர் முன்னணியின் தீவகப் பிரதேச தலைவர் திருமதி தங்கராணி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்புரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈழவேந்தன், க.பத்மினி சிதம்பரநாதன், ஊர்காவற்றை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சுந்தரலிங்கம், தேசிய எழுச்சிப் பேரவையின் வேலணைப் பிரதேச செயலாளர் சி.இராமச்சந்தின் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வடமராட்சியில்....**

வடமராட்சியில் திலீபன் நினைவு நிகழ்வுகள் வல்வை ஆதிகோவிலடியிலும் கரவெட்டி மாலுசந்திப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்திலும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் இடம்பெற்றன.

வல்வை ஆதிகோயிலடியில் நேற்றுக்காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரை பயிற்சி வீரர் நோஸ்மன் ம. கஜேந்திரன் ஆகியோரும் தமிழீழத் தேசியக் கொடியை மாவீரரான லெப்டினன் பாவேந்தன், கப்டன் ஜெயந்தன் ஆகியோரது தந்தை மு.சோதிலிங்கமும் ஏற்றினர். திலீபனின் திருவுருவப்படத்திற்கு கப்டன் சிலம்பரசனின் தாயார் கமலாதேவி குமரகுரு மலர்மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து கங்கைஅழகன் படையின் முதலாவது பயிற்சிப் படையணியின் அணிவகுப்பு மரியாதையுடன் மலரஞ்சலியும் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் போன்றவர்களது மலரஞ்சலியும் நடைபெற்றன. பயிற்சிப் படையணி உறுப்பினர் உரையும் மாணவர்களது நினைவுரை, நினைவுப் பாடல்கள் போன்றன நடைபெற்றன.

அடையாள உண்ணாவிரதம் ஒரு மணியளவில் நீராகாரத்துடன் முடித்துவைக்கப்பட்டது. கரவெட்டி மாலுசந்திப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு காலை 9 மணிக்கு பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவரும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினருமான எஸ்.செவ்வந்திநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

இதில் ஈகச்சுடரை நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம், வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி எஸ். அம்பலவாணர், வடமராட்சி கோட்ட முன்பள்ளி அதிகாரி துரை சத்தியசீலன் எஸ். செவ்வந்திநாதன் ஆகியோர் ஏற்றினர். திலீபனின் உருவப்படத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவநேசன் மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. அடுத்து பொதுமக்கள், மாணவர்கள் என அனைவரும் மலரஞ்சலி செலுத்தினர். நினைவுரையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாணவர்களால் நினைவுரை, எழுச்சிக்கவிதைகள் நிகழ்த்தப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து திலீபன் நினைவு அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு பிற்பகல் ஒரு மணிக்கு நீர் ஆகாரத்துடன் உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் தியாகதீபம் திலீபனின் 18ஆவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10.48 மணிக்கு எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பணிமனையில் திலீபனின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் நிகழ்வு நடைபெற்றது. பொதுச்சுடரினை மாவீரர் துயிலும் இல்லப் பணியாளர் எஸ்.சூரியப்பு ஏற்றினார். உருவப்படத்திற்கு மாவீரர் குயிலி அல்லது வீமா, லெப். இளம்பிறை அல்லது கண்ணன் ஆகியோரது தாயார் எஸ். தங்கராசா மலர்மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லப் பணியாளர்கள், மாவீரர் குடும்பத்தினர், பொதுமக்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

(ஒ-7-9-30-31-70-74-86-117-111)

**"தமிழின விடுதலைக்காய் தமிழர் நாம் அணி திரள்வோம் - செப்ரெம்பர் 30 இல்"**

## 'லைசென்ஸ்' இல்லாதவர் செலுத்திய மோட்டார்சைக்கிள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு அபராதம் விதித்த யாழ். நீதிவான் அவரது மோட்டார் சைக்கிளை 6 மாதத்துக்கு தடுத்து வைக்கும்படி உத்தரவிட்டார்.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றார் என்று குற்றஞ்சாட்டி இளைஞர் ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் பொலீஸாரால் ஆஜர்செய்யப்பட்டார்.

அவருக்கு 2ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்த யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, பிரஸ்தாப நபர் செலுத்திய மோட்டர் சைக்கிளை ஆறு மாத காலத்துக்கு தடுத்துவைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்டவர் ஆறுமாத காலத்துக்குள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் நீதிவான் பணித்துள்ளார். (ஒ-3)

## சைக்கிள்களில் சமாந்தர சவாரி; மாணவருக்கு புதுவிதத் தண்டனை

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். நகரப்பகுதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற மூன்று மாணவர்களுக்கு புதுவகையான தண்டனையை யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விதித்துள்ளார்.

சமாந்தரமாக சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவர் மூவரை பொலீஸார் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் ஆஜர்செய்தனர்.

அவர்களை அரச செலவாக ஆயிரம் ரூபா செலுத்தும்படி உத்தரவிட்ட நீதிவான், இனி சமாந்தரமாகச் சைக்கிளில் செல்லமாட்டேன் என்ற வாசகத்தை தனித்தனியே ஆயிரம் தடவைகள் எழுதி அதை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் -

அதுவரை அவர்களது சைக்கிள்களை நீதிமன்றத்தில் தடுத்துவைக்கவேண்டும் என்றும் - பணித்தார். (ஒ-3)

## யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக தியாகேந்திரன் இன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.தியாகேந்திரன் இன்று காலை பதவியேற்கவிருக்கின்றார். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று காலை அவர் வழிபாடு நடத்திவிட்டு பதவிப்பொறுப்பை ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய கே.பி.எஸ்.வரதராஜா ஓய்வுபெற்றதையடுத்தே அந்த இடத்துக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு நீதிச்சேவையில் இணைந்துகொண்ட நீதிபதி எஸ்.தியாகேந்திரன் பல மாவட்டங்களில் நீதிச்சேவையில் பணியாற்றினார். திருகோணமலை நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய இவர் தற்போது யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (ஒ-3)

## கைதடி முதியோர் இல்லத்துக்கு தேசிய மட்டத்தில் முதலிடம்

இலங்கையில் இயங்கும் முதியோர் இல்லங்களில் கைதடி முதியோர் இல்லம் இவ்வருடத்திற்கான சிறந்த முதியோர் இல்லமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சிறந்த மூதியோர் இல்லம் தேசியமட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது. இதன்படி கைதடி முதியோர் இல்லம் முதலிடத்தினைப் பெற்றுள்ளதாக கொழும்பு வயதுவந்தோருக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சீராமணி கருணாரத்ன அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் முதலாம் திகதி கொழும்புரவர் மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச முதியோர் தினத்தை நினைவுகூரும் தேசிய வைபவத்தில் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ இதற்கான விருதை கைதடி முதியோர் இல்லத்துக்கு வழங்குவார். இந்த விருதை பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர், முதியோர் இல்லப் பொறுப்பாளர் ஆகியோருடன் வைபவத்தில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. (ஒ-117)




## ஆயிரமாவது வீடு கையளிக்கும் நிகழ்வு கற்கோவளத்தில் நாளை நடக்கும்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். அலுவலகத்தினரால் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டுவரும் தற்காலிக வீடுகளில் கற்கோவளம் புனிதநகரில் அமைக்கப்பட்ட ஆயிரமாவது வீடு நாளை பயனாளியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான சம்பிரதாய நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு க்ற்கோவளம் புனிதநகரில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதிவதிவிடப் பிரதிநிதி திருமதி மஸ்ரிநொட்ஸ், ஜப்பான் தூதராலயப் பிரதித் தலைமை அதிகாரி திருமதி கரூபி, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். அலுவலகத் தலைமை அதிகாரி அக்ரன் ரகாய் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிறுவனம் ஆயிரத்தி 558 வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென மணற்காட்டில் 210 வீடுகளும், கற்கோவளத்தில் 111 வீடுகளும், பொற்பதியில் 93 வீடுகளும், புனித நகரில் 139 வீடுகளும், குடத்தனையில் 35 வீடுகளும், முனையில் 30 வீடுகளும் அமைத்துவருகின்றது.

அத்துடன் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 276 வீடுகளும், சண்டிலிப்பாயில் 72 வீடுகளும், தெல்லிப்பளையில் 308 வீடுகளும், உடுவிலில் 92 வீடுகளும், கோப்பாயில் 37 வீடுகளும், மண்டைதீவில் 145 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 10 வீடுகளும் அமைக்கப்பட்டுவருகின்றன.

வீடுகள் ஒவ்வொன்றும் 70 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருகின்றன.

இத்திட்டமானது யாழ். சமூக செயற்பாட்டு மைய வீடமைப்புத்திட்ட நடைமுறைப் பிரிவினரால் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டுவருகின்றது. (3-203)

# தியாகி திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவுப் பதிவுகள்...

## நல்லூரில்...



பொதுச்சுடர் ஏற்றும் சிவஸ்ரீ தனேஸ்வரக் குருக்கள் | பொதுச்சுடர் ஏற்றும் அ.பி.ஜெயசேகரம் அடிகளார் | மௌலவி மொகிடீன் பிக்ஷை | மலரஞ்சலி செலுத்துகையில்



நினைவுக் கல்வெட்டு | அடையாள உண்ணாவிரதத்தில்...

**படங்கள்: பிரபா, சுந்தரலிங்கம், தங்கவேல்**

## சாவகச்சேரியில்...



அஞ்சலி நிகழ்வில் மாணவர்களும் பொதுமக்களும் | சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் | தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் | தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் | அஞ்சலி நிகழ்வில் மாணவிகள்

## வல்வை ஆதிகோவிலடியில்...



கப்டன் சிலம்பரசியின் தாயார் | இரு மாவீரரின் தந்தை மு.சோதிலிங்கம் தேசியக் கொடி ஏற்றுகிறார். | நிகழ்வில் கலந்துகொண்டோர்

## கரவெட்டி மாலிசந்தி பிள்ளையார் ஆலயச் சூழல்...



சிவனேசன் எம்.பி. | நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

# வெண்புறாவின் கரபந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் வி.க. வென்று சம்பியன்


யாழ்ப்பாணம்,செப்.27

இளவாலை கிராம அபிவிருத்திச் சங்க அனுசரணையுடன் வெண்புறா விளையாட்டுக் கழகம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை வெண்புறா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதின.

ஐந்து செற்களைக் கொண்ட இவ் இறுதியாட்டத்தில் 26:24, 26:24, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் 3:0 என்ற நேர் செற் கணக்கில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.மகிந்தரன் தெரிவு செய்யப்பட்டார். (3-410)



யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஆதரவுடன் கண்ணகி சிறுவர் கழகத்தினர் அண்மையில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர்.

இந்தப் போட்டியில் இடம்பெற்ற சிறுவர்களின் 'இசையும் அசைவும், நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட படம் இது (படம்: தமிழினியன்)

# இன்றைய ஆட்டங்கள்

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் நவாலி அட்டகிரி வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மாதகல் சென்.யோசப் வித்தியாலயம் (மானிப்பாய் இந்து மைதானம்)

**14 வயதுப் பிரிவு**

* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் நுணசை வித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு**

* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (புனித ஹென்றியரசர் மைதானம்)

* * *

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர் தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், ஏழாலை முருகவேள் வித்தியாலயம், அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம், நாரந்தனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

14, 16, 18 வயதுப் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற இவ்வாட்டங்களின் அணி ஒழுங்குகள் குறிப்பிட்ட மைதானத்தில் வைத்தே இடம்பெறவுள்ளது. (3-86)

* * *

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

14,16,18 வயதுப் பிரிவுகளுக்கு இடையே இப்போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இன்றைய போட்டிகளுக்கான அணி ஒழுங்குகள் மைதானத்தில் வைத்தே செய்யப்படவுள்ளன.

இதில் வேலணை மத்திய கல்லூரி, வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம் ஆகியன கலந்துகொள்ளவுள்ளன. (8)




# பாடசாலைகள் கிரிக்கெட் போட்டி; சென்.ஜோன்ஸ் 7 ஓட்டங்களால் வெற்றி

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சு பாடசாலைகளுக்கு இடையில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

நவகீதன், சஞ்ஜீவன், சயிந்தன் முறையே 30, 28, 12 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சொலின் 36 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும், சுரேன் 18 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

மரிக்குமார், ஜெயந்திரன், ஜக்சன், லுட்சன் ஆகியோர் முறையே 41, 18, 17, 17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

நிருபன் 17 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் கிறிஸ்சாத் 18 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

(3-190)

## கொக்குவிலில் மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.27

கொக்குவில் மேற்கு பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டின் நிறைவையொட்டி பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினரால் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ஐந்து பந்து பரிமாற்றங்களைக் கொண்ட ஆறு வீரர்கள் பங்குபற்றும் இந்த மென்பந்து சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என சுற்றுப் போட்டியின் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-ரி)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

குறோட்டன், பாம்ஸ், சைப்பிரஸ், அலெக்கெரியா, சைகஸ், முசந்தாஸ், எவகிறீன், யூகோப்பியா (சிவப்பு), போகன்விலா, (கடதாசிப்பூ) பிலிம்பியா, அலரியா, றெசீனா, றொரன்ரா, மினிஎக்சோறா, செவ்வரத்தை, எக்சோறா (பிங்) ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (40361)

### வீடும் காணியும் விற்பனை

வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை (தாவளை ஒழுங்கை)இல் 5 பரப்புள்ள காணியுடன் நவீன வசதிகொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி உருத்திரமூர்த்தி, வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை (தாவளை ஒழுங்கை). **T.P.No.:** 0712 574665. (40238)

நல்லூர், இருபாலை றோட்டுக்கு மத்தியில் ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டரங்க வீதியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு 3 ½ பரப்புக் காணியுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.No. 0714 068844, 0773 144700.** (40279)

### தவறிவிட்டது

சின்னத்தம்பி சிவராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (481414822V) யாழ்.குடாநாட்டிற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர் எனும் முகவரியுடனோ அல்லது தொ.பே. இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தயவாக வேண்டிக்கொள்கிறேன். **T.P.:** 0779006803, 0712318642 (சிவனேசன்) **or** (சிவராஜா) (40466)

### பிரபல எழுத்தாளரின் நூல்கள்

1 'இமயம்' மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான பதினொரு நவீன நாடகங்கள், 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. எங்கள் நாடு 4. வானொலி நாடகம் எழுதுவது எப்படி? 5. ஒரு காதலின் கதை 6. சிறுகதை எழுதுவது எப்படி? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. (40469)

### குருத்தோலைகள் தேவை

ஏடுகள் தயாரிப்பதற்கு
குருத்தோலைகள் தேவை.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**அண்ணா பாம்,**
**இணுவில்.**
(சி-45305) (30-18-16-21)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**
*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.*

## மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில்
## தேர்ப்பகுதிகள் விற்பனை

மேற்படி ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் அமைக்கப் பெற்றமையால் பழைய கட்டுத் தேரின் நல்ல நிலையிலுள்ள பின்வரும் பகுதிகள் விற்பனைக்கு உண்டு.

* தேர் குத்துக்கால்
* தேர் முடி
* புதிதாக தைக்கப்பட்ட அழகிய தேர்ச்சேலை

பொருள்களைப் பார்வையிடும் நேரம்
பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:**

திரு.கு.கந்தசாமி (விதானையார்),
தலைவர், மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில்,
மல்லாகம்.

ஆலய தர்மகர்த்தா சபை,
*நீலியம்பனைப் பிள்ளையார் கோயில்,*
*மல்லாகம்.*

(40456)
(32-21-18-16)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*2005ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதி சிறப்பாகச் சித்திபெற்று எமது வித்தியாலயத்துக்குப் பெருமை தேடித் தந்த*

கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி கு.தனுசா | - 2A, B | (மாவட்ட முதனிலை) |
| செல்வி மு.ஜெயந்தி | - 2A, B | (மாவட்ட இரண்டாம் நிலை) |
| செல்வி நா.விஜயதர்சினி | - A, 2B | |
| செல்வி சி.தயாநிதி | - A, 2B | |
| செல்வன் சு.கோணேஸ்வரன் | - A, B,C | |
| செல்வி இ.மோகனாம்பிகை | - 2B, C | |
| செல்வி வ.சுகந்தராஜினி | - A, B, C | |

வணிகப்பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வன் பா.தேவரதன் | - 2A, B | (மாவட்ட முதனிலை) |
| செல்வன் வி.கோபி முகுந்தன் | - A, 2B | |

(சி-45306)
(21.16.18)

ஆகியோரையும் இன்னும் சிறந்த பெறுபேறுகள் பெற்ற அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாடசாலைச் சமூகம்
கிளி/ பூநகரி மகாவித்தியாலயம்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 02 - 1929



உதிர்வு 26 - 09 - 1997

**அமரர் வேலுப்பிள்ளை நற்குணராசா**

அகம் நிறைய அன்பு கொண்டு
அரவணைத்து எமை வளர்த்தீர்
அப்பா என்று அழைத்த குரல்
அடங்கி ஓய்ந்து நாம் தவிக்க
இக வாழ்வை துறந்து பரமனடி சேர்ந்தீரே!
பணிந்தோம் அவன் தாள்கள் உம் ஆத்மா சாந்திபெற

என்றும் உங்கள் நினைவுடன்:
**மனைவி, மக்கள்.**

*மீசாலை வடக்கு,*
*புத்தூர் சந்தி, கொடிகாமம்.*

(40470)(21.18.16)

## மரண அறிவித்தல்

## செல்லர் சிவசுப்பிரமணியம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இராஜ வீதி, நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சிவசுப்பிரமணியம் அவர்கள் 25-09-2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீலாதாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லர்-செல்லம் தம்பதியினரின் மகனும் சிவலிங்கம், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற சிவமணி மற்றும் சிவமலர், சிவலட்சுமி, சிவசோதி, சிவகுருநாதன், காலஞ்சென்ற சிவநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானந்தன் (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவதர்மினி, பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் யசோதராதேவி, மாமாங்கம்,ராகவன் (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், நாகமுத்து சோமசுந்தரத்தின் மைத்துனரும் பிரான்ஸில் வசிக்கும் சர்மினி, சர்மிலன், கவனியா, லதுஷன், பிரசாந், பிரகாஷனி, சகானா, பிரசன்னா, நிலானி, ஈழரமணன், பிரதீப் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*நவக்கிரி.*

(40471)(46-21-16-18)

தகவல்:
**சிவகுருநாதன்.**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இரட்டை வேடத்தைக் களைந்து பிரதமர் தமது தகுதியை நிரூபிக்கத் தயாரா?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற நாட்டின் உயர் அதிகாரப் பதவிக்குப் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரின் அரசியல் நிலைப்பாடு இன்று சந்தி சிரிக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அதிகளவு செல்வாக்கும், பெருத்த ஆதரவும் இருப்பதாகப் பலரும் பேசிக்கொண்டாலும் அவரது அரசியல் கொள்கைப் போக்குக் குறித்து பலரும் குறைகூறி விமர்சிக்கத் தவறவில்லை.

தேர்தல் களத்தில் ஆதரவு தேடி அலையும் மஹிந்த ராஜபக்ஷ தம்மைச் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி விளக்கம் கொடுக்கிறார் - தனது நிலைப்பாட்டை வெவ்வேறு விதமாக எடுத்துரைக்கிறார் - என்று பலரும் விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

தேர்தலில் வெல்லும் இலக்கில் - ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளைச் சார்ந்த பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குடைய தென்பகுதி மக்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் அவர்களுக்கு ஒரு கருத்தும் -

வடக்கு - கிழக்குத் தமிழர்களிடமும் ,சமாதானத்தை விரும்பும் ஏனையோரிடமும் அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக இன்னொரு கருத்தும் -

கூறி, இரட்டைவேடம் போடுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பது அம்பலமாகி வருகின்றது.

அதைப் புரிந்துகொண்டுள்ள பிரதமர் அந்தக் குற்றச்சாட்டையும் சமாளிப்பதற்கு மற்றோர் இரட்டை வேடத்தைப் போடுகின்றார்.

''தேர்தலில் வெல்லும் நோக்கில் தென்பகுதி சிங்களப் பெரும்பான்மையினரின் வாக்குகளைத் திரட்ட வேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்காக அவர்களுடன் ஒப்பந்தம் செய்கிறேன்; வாக்குறுதிகள் வழங்குகிறேன். அவை எல்லாம் வெறும் காகித ஒப்பந்தங்கள். தேர்தலில் வென்றுவந்த பின்னர் நான்தானே முடிவு எடுப்பது? அப்போது இந்த வாக்குறுதிகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டுவிடும். நியாயப்படி நடப்பேன். தமிழர்களின் போராட்டத்தில் உள்ள நீதி, நியாயத்தை உணர்ந்து இணக்கத்தீர்வு ஒன்றை ஏற்படுத்துவேன். நான் வென்று ஜனாதிபதியாகி, அதிகாரத்தில் அமர்ந்த பின்னர் ஜே.வி.பியோ, ஜாதிக ஹெல உறுமயவோ அவற்றுடன் நான் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களோ என்னைக் கட்டுப்படுத்த முடியாது. நான் சுயாதீனமாக நடப்பேன்.''- என்றெல்லாம் அமைதி வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புவோரிடமும் தமிழர்களிடமும் உரைக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவரின் இது மாதிரியான கதைகள், பேச்சுகள் போன்றவை அவரது தற்போதைய சகபாடிகளான ஜே.வி.பியினருக்கும், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேரர்களுக்கும் தெரியாது என்பதல்ல. அவர்களையும் வேறு சமாதானம் கூறிச் சமாளிக்கின்றார் பிரதமர்.

''சிறுபான்மையினரின் சீற்றத்தைத் தணிப்பதற்காக அப்படிப் பேச வேண்டியிருக்கின்றது. அவர்களையும் கொண்டு இழுக்கத்தானே வேண்டும்.?''- என்று அந்தக் கட்சியினரிடம் சமாதானம் கூறுகின்றார் அவர்.

இப்படி இரு தரப்புக்கும் ஒவ்வொரு கதைவிட்டு விடயத்தை வெற்றிகரமாகக் கையாளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் சாணக்கியம் பாராட்டத்தக்கதுதான்.

இந்தச்செயற்பாடுகள் மூலம் தன்னைக் கைதேர்ந்த அரசியல்வாதியாக அவர் நிரூபித்திருக்கின்றார் என்பதும் உண்மைதான்.

ஆனால், அரசியல்வாதி என்பது வேறு. 'நாட்டின் தலைவன்' என்ற - 'தேசத் தலைவன்' (State's man) என்ற - உயர்பதவி வேறு.

அரசியல்வாதி, அரசியல் வெற்றிக்காக எப்படியும் நாக்கைப் புரட்டிப் போட்டுப் பேசலாம். ஆனால், நாட்டின் தலைவராக வரவிருப்பவர் இலகுவாக அப்படி நடந்துகொள்ளமுடியாது. நடந்துகொள்ளவும் கூடாது. அந்தத் தலைமை தாங்கும் தகைமைக்குரிய நிலைப்பாட்டை, பண்புகளை வெளிப்படுத்துபவராக அவர் இருக்கவேண்டும். அது முக்கியம். அப்படி இருந்தால் தான் அவர் தேசத் தலைவராக முடியும்.

நாட்டின் மிக முக்கிய தேசியப் பிரச்சினையான இனப்பிணக்குக்கு தீர்வுகாணும் அடிப்படை விவகாரம் குறித்து தென்னிலங்கை மக்களுக்கு ஒரு பேச்சும், வடக்கு - கிழக்குக்கும், சர்வதேசத்துக்கும் வேறு ஒரு பேச்சுமாக இரட்டை வேடம் போடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக வருவதாயின் தாம் சாதாரண அரசியல்வாதி என்பதைத் தாண்டி ஒரு தேசத்தின் தலைவராக வருவதற்குத் தகுதி உடையவர் என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் தனது நடவடிக்கைப்போக்கு என்ன, அணுகுமுறை என்ன, பாதை எது என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தி, அதைப் பகிரங்கமாக அறிவித்து, அதன்மூலம் தாம் State's man ஆகும் தகுதியுடையவர் என்பதை அவர் நிரூபிக்கவேண்டும். அதற்கு அவர் தயாரா?

## மூன்று வீதிகளை அகலமாக்கும் பணி முதலில் கட்டடங்கள் அற்ற பகுதியிலேயே

யாழ்ப்பாண,செப்.27

வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ள 3 வீதிகள் அகலமாக்கும் பணியில் அகலப்படுத்த வசதியாகவுள்ள பகுதிகளிலேயே தற்போது கவனம் செலுத்தப்படும். கட்டடங்களை அகற்ற வேண்டிய இடங்கள் குறித்துப் பின்னர் பரிசீலிப்போம்.

- இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

குடாநாட்டில் நீண்டகால நோக்குடைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு எமது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நீண்டகால அடிப்படையில் குடாநாட்டின் பிரதான வீதிகள் சில அகலமாக்கிப் புனரமைக்கப்படவுள்ளன. அவற்றில் 3 வீதிகளை உடனடியாகப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம், காரைநகர்- யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்- பண்ணைவீதி (குறிகட்டுவான் வரை) ஆகிய 3 வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. இந்த வீதிகளைப் புனரமைக்கும் போது வீதியின் நடுவிலிருந்து இரு மருங்கிலும் 7.5 மீற்றர் அகலமாக் கப்படும்.

இந்த வீதிகளை அகலமாக்கும் போது சில கட்டடங்கள் அகற்றப்பட வேண்டிய தேவையுள்ளது. ஆயினும் தற்போது அகலப்படுத்துவதற்கு வசதியாக உள்ள இடங்களிலேயே பணிகள் ஆரம்பிக்கப்படும். அவை முடிந்த பின்பே ஏனைய இடங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-202)

## கலாசாரம் பேணும் நால்வர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்கு

### விசாரணை முடிவில் விடுதலை

யாழ்ப்பாணம்,செப்.27

கலாசாரம் பேணும் குழுவைச் சேர்ந்த நால்வருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணை முடிவில் அந்த நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த ஒருவர் குப்பிளான் கிராமத்திற்குள் பிரவேசித்து சமூக சீர்கேட்டு நிலையம் ஒன்றை உருவாக்கி செயல்பட்டபோது, குப்பிளானைச் சேர்ந்த கலாசாரத்தைப் பேணும் குழுவைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் அதற்கு எதிராக சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதனால், ஆத்திரமுற்ற சமூகச் சீர்கேடுகளில் ஈடுபட்ட நபர், இந்த நான்கு இளைஞர்களுக்கு எதிராகவும் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார். இதனை அடுத்து சுன்னாகம் பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அச்சமயம் வழக்கில் கலாசாரத்தைப் பேணும் குழுவைச் சேர்ந்த நாலு இளைஞர்கள் சார்பிலும் ஆஜரான சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் -

இந்த நான்கு இளைஞர்களும் முன்னர் ஒருபோதும் குற்றம் செய்யாதவர்கள். சிலர் மாணவர்கள், சிலர் பட்டதாரிகள், அரச உத்தியோகத்தர்கள் என விவரமாக எடுத்துரைத்து இவர்கள் சமூக ஒழுங்கு பேணுவதற்காகச் செயல்படுபவர்கள் என்பதை விளக்கினார். வழக்கைப் பூரணமாக விசாரித்த மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் விசாரணை முடிவில் நான்கு இளைஞர்களையும் விடுதலை செய்தார். (எ-3)

### கலாசார அலுவலருக்கு அவசர கலந்துரையாடல்

யாழ்,மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சகல கலாசார உத்தியோகத்தர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள இசைநாடக விழா தொடர்பாக ஆராய்வதற்காக இந்த அவசர கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - ஆதலால் சகல கலாசார உத் தியோகத்தர்களையும் இதில் கலந்து கொள்ளு மாறும் - மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி கேட்டுள்ளார். (எ)

## பனம் பழம் பொறுக்கச் சென்ற பெண் பாம்பு தீண்டியதில் அதே இடத்தில் மரணம்

அதிகாலை வேளையில் பனங்காணிக்குள் பனம்பழம் பொறுக்கிக் கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் பாம்பு தீண்டி அந்த இடத்திலேயே மரணமானார். அல்வாய் வடக்கைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் சரோஜாதேவி (46 வயது) என்ற பெண்ணே இவ்வாறு மரணமான வராவார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இதே இடத்தில் உள்ள பனங்காணிக்குள் மரணமான நிலையில் இருந்த இவரது சடலத்தைச் சிலமணி நேரங்களின் பின்னர் பனைமரம் ஒன்றில் கள் இறக்கிக் கொண்டிருந்த சீவல் தொழிலாளி ஒருவர் கண்டு உறவினர்களுக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பருத்தித்துறை பதில் நீதிவான் ந.தங்கராஜா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

வைத்திய பரிசோதனை செய்த வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை தமது அறிக்கையில் பாம்பு தீண்டி விஷம் தலைக்கேறியதால் மரணம் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-173)

### உதயவாக்கு

மற்றவர்களை எடை போடுவதில் காலத்தை செலவழிக்காதீர்கள். ஏனெனில், அவர்களை நேசிக்க உங்களுக்கு நேரமில்லாமல் போகும்.

- அன்னை தெரேஸா.

## புலோலி தெற்கில் வீடொன்றிலிருந்து 20 பவுண் நகை, ரொக்கப் பணம் திருட்டு

புலோலி தெற்குப் பெருந்தெருவில் உள்ள வீடொன்றில் நள்ளிரவு நேரம் சமையலறையின் ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் அவ்வீட்டின் சுவாமி அறையில் வைக்கப்பட்டிருந்த 20 பவுண் பெறுமதிமிக்க தாலிக்கொடி, அட்டியல் உட்படப் பல்வேறு நகைகளையும், 35 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.


இதே இடத்தைச் சேர்ந்த யோ. நாகேஸ்வரசர்மா என்பவரின் வீட்டில் இந்தத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் உட்புகுந்த திருடர்கள், வீட்டுக்காரர்கள் படுத்திருந்த இடத்தில் இருந்த கட்டிலிலிருந்த சுவாமி அறைத் திறப்பை எடுத்துத் திறந்து அதற்குள் இருந்த தங்க நகைகளையும் ரொக்கப் பணத்தையும் எடுத்துச் சென்று விட்டனர் எனக் கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (எ-173)

### நாளை

புரட்டாதி 11
புதன்கிழமை
28.09.2005
திதி: தசமி
காலை 07.40 வரை
நட்சத்திரம்: பூசம்
முன்னிரவு : 07.33 வரை
சுபநேரம்: 04.32 - 06.02
ராகுகாலம்: 12.02 - 01.32
(யாவும் பழைய நேரப்படி)



# நோக்கிலிருந்து திசைமாறிவிட்ட ஐந்தாம்தர புலமைப் பரீட்சை

- படியடா, படியடா கொலர்சிப் சோதனை பெயில் எண்டால் ஒன்றுமே செய்யமுடியாதடா.
- மாடு! படி உனக்கு எத்தனை தடவை சொல்கிறது.
- ரியூசனுக்கு ஓடு நேரமாச்சு.
- பேப்பரில மொடல் பேப்பர் பார்த்தனியா?
- இன்று விசேட கருத்தரங்கு இருக்குதாம் என பக்கத்து வீட்டு பெடியன் போகிறான், நீயும் போடா.
- ஜப்பானுக்குப் போகவேணுமடா கவனமாகப் படி.
- இந்தமுறை எமது வலயமட்ட கொலர்சிப் பரீட்சை முடிவை உயர்த்திக்காட்டவேண்டும்.
- பாடசாலைமட்ட பரீட்சை முடிவைக் கூட்டவேண்டும்.
- இன்று பாடசாலை முடிவடைந்ததும் விசேட வகுப்பு உள்ளது.
- கொலர்சிப் படிக்கின்ற மாணவர்கள் எல்லோரும் இன்று வடிவாக வரவேண்டும். ஏனென்றால், இன்று இங்கு படித்த மாணவர்களை எல்லாம் படமெடுக்கப் போகின்றோம். பேப்பரில் போடுவதற்கு.
- வடக்கு - கிழக்கு மாகாணமட்ட பெறுபேற்றை மற்றைய மாகாணத்தில் இருந்து உயர்த்தவேண்டும்.

**பிள்ளையோ - மௌனியாக பல்வேறு நெருக்கீடுகளுக்குள்.**

மேலே கூறப்பட்ட வசனங்கள் எல்லாம் எமது பிரதேசத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு பல்வேறு தரப்பினராலும் கூறப்படும் கருத்துகளாக அமைகின்றன. யார் யார் எக்கருத்துகளைக் கூறுவார்கள் என்பது உங்கள் சிந்தனைக்கு.

இலங்கையில் நடைபெறும் நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்புப் பொதுப் போட்டிப் பரீட்சைபோன்று தரம் 5இல் நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான போட்டிப்




பரீட்சையும் அமைவதைத் தற்போது காணமுடிகின்றது. இதன் அடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சையின் பின்னணி, நோக்கம், வினாத்தாள் உள்ளடக்கம், 2003 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆலோசனைக் குறிப்புகள், நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் மாற்றுத் திட்டங்களுக்கான முன்யோசனைத் திட்டங்கள், பரிந்துரைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### புலமைப்பரிசில் பரீட்சையின் பின்னணியும் நோக்கமும்

புலமைப் பரிசில் பரீட்சை ஆரம்ப காலங்களில் சமூக, பொருளாதாரமட்டத்தில் பின்தங்கியவர்கள் உயர் கல்வியைப் பெற ஊக்குவிக்கும் நோக்குடன் 1940களில் அப்போதைய கல்வி அமைச்சராக

## மாற்று ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்துவது அவசியம்

இருந்த டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்தங்கிய மாணவர்களை நாட்டிலுள்ள பிரதான மத்திய மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் அனுமதியைப் பெற்று கல்வியைத் தொடர்வதற்குப் புலமைப் பரிசில் வழங்கும் நோக்குடன் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் தாய்மொழி மூலமான கல்வியின் அறிமுகமும் மத்திய பாடசாலைகளில் விடுதிகள் மூடப்பட்டமையும் அதனால் பிரபல்யமான பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் முறைமையும் முக்கியம் பெறத் தொடங்கியது.

ஆரம்பகாலத்தில் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கு 15 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. புலமைப் பரிசில் பெற்றவர்களுக்கு விடுதி வசதியுடன் கூடிய ஆங்கில மொழிமூலமான கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டது. 1968இல் இப்பரீட்சை 7ஆம் வகுப்புக்கு மாற்றப்பட்டு பின்னர் மீண்டும் 1973இல் ஐந்தாம் வகுப்புக்குக் கொண்டு வரப்பட்டது.

### வினாத்தாள் உள்ளடக்க அபிவிருத்தி

தொடக்க காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் விவேகம், எண் கணிதம், தாய்மொழி என்பவற்றைப் பரீட்சிப்பதாக இருந்தது. பின்னர் 1992 ஆம்ஆண்டில் மொழிப்பரீட்சை, கணிதப் பரீட்சை வினாப்பத்திரங்களில் 3,4,5 தரப் பாடவிடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து உளச்சார்புப் பரீட்சை கைவிடப்பட்டு சிங்களம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான நான்காம், ஐந்தாம் தரப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சை நடைபெற்றது.

1993 இல் புலமைப்பரிசில் பரீட்சை உளச்சார்புப் பரீட்சையுடன் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை கற்பிக்கப்பட்ட பாடவிடயங்களுடன் தொடர்புபட்ட மற்றொரு வினாத்தாள் ஏற்படுத்தப்பட்டது. 1998இல் இருந்து ஆங்கிலமும், பொது அறிவும் சேர்க்கப்பட்டு பரீட்சிக்கப்படுகின்றன. பின்னர் 2002இல் உளச்சார்புப் பரீட்சை சொல்சார்ந்த வினாக்களுடன் பட, வரைபடக் குறியீட்டு வினாக்களும் சேர்க்கப்பட்டன.

### 2003இல் தேசிய கல்வி ஆணைக் குழுவின் சிபார்சு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக்கல்வி பற்றிய ஆலோசனை அறிக்கையில் இரண்டாம் வினாத்தாள் பற்றிய குறிப்பில் புதிய கல்விச் சீர்திருத்தம் பிரதான விடயமான அத்தியாவசியமான கற்றல் தேர்ச்சிகளைக் கணிப்பீடு செய்வதாக அமையவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன், இதற்குப் பின்வரும் காரணங்களையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

1. தனியார் போதனையை நாடுவது குறைவடையும்.
2. தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.
3. கல்விச் சீர்திருத்தத் தேர்ச்சிமைய பரீட்சை உருவாகும்.
4. உதவித் தொகையை 2,400 ரூபாவில் இருந்து 5,000 ரூபாவாக ஆண்டுக்கு உயர்த்துதல்.

வகுப்பறையில் அத்தியாவசியமான தேர்ச்சிகளை அடையும் மாணவன் இப்பரீட்சையில் அவற்றினைப் பிரயோகிக்கும் வகையிலேயே வினாத்தாள் அமையும் என்பது முக்கிய எதிர்பார்ப்பாகும்.

### புலமைப் பரிசில் வழங்குதலின் எதிர்பார்ப்பு

குறைந்த பொருளாதார வருமானத்தை உடைய பிள்ளைகளுக்குப் பண வசதி வழங்கிக் கல்வியைப் பெற ஊக்குவிப்பதுடன், ஏனைய வசதியுள்ள பிரிவினருக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாடசாலைகளில் அனுமதிபெற இப்பரீட்சை. சமூக அந்தஸ்தையும் வழங்கியது.ள பின்னர் இது படிப்படியாக மாற்றம் பெற்று ஒரு போட் டிப் பரீட்சையாகவும் தனியார் போதனையை ஊக்குவிப்பதாக வும் மாணவர்களுக்குக் கற்றல் சுமையைக் கூட்டுவதாகவும் பெற்றோர் கல்வி கற்கும் நிலைக்கும் இட்டுச் சென்றுள்ளதுடன், பிள்ளையின் மகிழ்ச்சியான செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் மாற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

### தாக்கங்கள்

புலமைப்பரிசில் பரீட்சையின் அறிமுகம் நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டாலும் அதன் அடிப்படை இலக்கு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளைக் கல்வி பெற ஊக்குவிப்பதாகும். இந்த நிலை சமகாலத்தில் கேள்விக்குரிய விடயமாகவே மாறியுள்ளது.

'புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் பெரும்பாலானோர் அதாவது 70 வீதம் மத்தியதரம், மேல்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகவே உள்ளதை அவதானிக்கமுடிகின்றது. கீழ்த்தரவர்க்க மக்கள் பரீட்சையை எதிர்கொள்வது என்பது கடினமான ஒரு விடயமாக உள்ளதையும் சுட்டிக்காட்டவேண்டும்.

**இராஜேஸ்**

பரீட்சையை நோக்கிய வழிப்படுத்தலில் பிள்ளையைப் பல்வேறு தரப்பினரும் நெருக்கீடு கொடுக்கும் பொழுது பிள்ளையின் இளம் மனம் அழுத்தத்திற்கு உள்ளாகி மகிழ்ச்சியற்ற சூழ்நிலைக்கும் விரக்தி நிலைக்கும் இட்டுச்செல்கிறது.

அரசு புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் என்ற பிரதான ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தை அமுல்ப்படுத்தியுள்ள அதேநேரம் இப்பரீட்சையினால் பிள்ளை இயல்பாகவே சந்தோசத்துடன் பாடசாலைக்கு வருகின்றதா என்பது சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது.

தற்போது பிள்ளைகளை பாடசாலைக்கு விருப்புடன் வரச்செய்யவும், மகிழ்வுடன் கற்கவும் ஏற்ற வகையில் பாடசாலையைக் கவின் நிலைப்படுத்தி 'பிள்ளை நேயப் பாடசாலை திட்டம்' நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இந்நிலையில் பிள்ளைக்கு வெறுப்பும், மன அழுத்தத்தையும் கொடுக்கும் வகையில் பரீட்சையை அடிக்கடி பாடசாலையில் இடம்பெறச் செய்வது எந்தவகையில் பொருத்தப்பாடு உடையது என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

பொதுவாகவே போட்டிப் பரீட்சைக்கு முகங்கொடுப்பவர்கள் பெரும் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்பது உளவியல் அறிஞர்களின் முடிவு. வெளிநாடுகளில் இந்த அழுத்தத்தை (Stress) குறைப்பதற்காகப் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அதிலும் குறிப்பாக வளர்ந்தவர்கள் ஓரளவு மனஅழுத்தத்தைத் தாங்கிக் கொள்வதாகவும், சிறுவர்கள் அதிகளவு பாதிப்புக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. சுகநலம் என்பது தனியே நோய்வராத நிலைமட்டுமல்ல அதற்கு ஒருபடி மேலாக உடல், உள, சமூக நன்னிலைமை (Well being) என்பவற்றில் உயர்வு பெறலாகும். நோய் இல்லாத நிலையை மட்டும் வைத்து சுகதேகிகள் என வரையறுக்கமுடியாது. இதன்படி மன அழுத்தம் தரும் பரீட்சைகள்கூட ஒருவரின் சுகநலத்தைப் பாதிக்கும் என்பது உண்மையான முடிவு.

இதற்கு 2004ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் செய்த ஆய்வின் படி 41 வீதமான பெற்றோர் குழந்தைகளின் சமூகவியற் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளதாகவும் 54 வீதமானவர்கள் தங்கள் குழந்தைகளின் பொழுதுபோக்கு நேரம் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளமை குழந்தைகளின் இயல்பான சமூகச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளமை ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது.


*(வளரும்)*

## கல்விச்சாலைக் காட்சிகள்



தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட அறநெறிப் போட்டிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி தரம் ஒன்று மாணவி ஆத்திசூடி மனனம் செய்தல் போட்டியில் முதலிடம் பெற்றமைக்காகப் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சித்ரூபானந்தா சுவாமியிடம் பரிசிலைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் 'நிக்கொட்' நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்படும் இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. அடிக்கல்லினைப் பாடசாலை அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (202)



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தின விழா கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி இ.வசந்தசேனன் உரையாற்றுவதையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்.விவேகானந்தராசா, லண்டன் பழைய மாணவர் சங்கச் செயற்குழு உறுப்பினர் எஸ்.திருமூலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*




புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய நிபுணர் கு.மகேசன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் [illegible] ர்ந்திரு[illegible] தையும் படத்தில் காணலாம். (202)

# காலி மீனவருக்கு நமது கடலில் சுதந்திரம்; நமக்குமட்டும் 'பாஸ்' நடைமுறை ஏன்?

## வடமராட்சி கடற்றொழிலாளர்கள் கேள்வி

யாழ்ப்பாணம்,செப்.27

காலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் நமது கடலில் 'பாஸ்' நடைமுறையின்றி மீன் பிடிக்கின்ற போது கடற்படையினர் எமக்கு மட்டும் ஏன் அத்தகைய நடைமுறையைத் திணிக்கிறார்கள்.

இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி றோஹித பிரியதர்சனாவிடம் கேள்வி எழுப்பினர் வடமராட்சி வடக்கு மீனவர்கள்.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர்களுக்கான 'பாஸ்' நடைமுறை கடற்படையினரால் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து மேற்படி கடற்றொழிலாளர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, ஆணைக்குழு அதிகாரி வடமராட்சிப் பகுதிக்கு நேரடியாகச் சென்று கடற்றொழிலாளர்களிடம் கலந்துரையாடினார்.

அப்போது வடமராட்சி மீனவர்கள் மேற்படி கேள்வியை எழுப்பினர்.

இது தொடர்பாக கடற்படையினருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரி உறுதியளித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் நடத்திய தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டவர்களுக்கு பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் சான்றிதழ்கள் வழங்கினார். *(படம்: நேசன்)*

# நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரியில் சுற்றுப்பாதை

சாவகச்சேரி,செப்.27

ஏ-9 பாதைப்போக்குவரத்தால் சாவகச்சேரி நகரப் பகுதியில் ஏற்படும் நெருக்கடியை சமாளிக்க சுற்றுப்பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டமிடப்பட்டுள்ள மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர அபிவிருத்தி 2030ஆம் ஆண்டினை எதிர்கொள்ளும்முகமாக - சுமார் 25ஆண்டுகள் முன்னோக்கி - திட்டமிட்டு - செயற்படுத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி ஏ-9 பாதையில் யாழ்ப்பாணத்துக்கு அடுத்துள்ள பெரிய நகரமாகும். இங்கு எதிர்காலத்தில் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். இதனைக் கருத்தில் கொண்டு மீசாலை, புத்தூர்ச் சந்தி, கனகன்புளியடிச் சந்தி, மட்டுவில், நுணாவில் சந்தி ஆகியவை ஊடாக சுற்றுப்பாதை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பாதை ஏ-9 வீதியுடன் இணைக்கப்படும். போக்குவரத்து நெருக்கடி அதிகமாகும் காலத்தில் ஏ-9 பாதையில் பயணிக்கும் வாகனங்கள் நெருக்கடியைத் தவிர்க்க சுற்றுப் பாதையைப் பயன்படுத்த முடியும். (ஒ-31)

# 'மைற்ஸ்' பீடையைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு அவசியம்

## தென்னை அபிவிருத்தி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

குடாநாட்டில் தென்னை மரங்களில் அதிகரித்துவரும் 'மைற்ஸ்' பீடைத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் குறிப்பாகத் தென்னைப் பயிர்ச்செய்கையாளரின் ஒத்துழைப்பு அவசியம்.

இவ்வாறு யாழ். மாவட்டத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் தென்னை மரங்களில் 'மைற்ஸ்' பீடையால் ஏற்படும் நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தென்னை மரங்களின் பயன் குறைகிறது. அத்துடன், பெறப்படும் தேங்காய்கள் கூட நோய்ப் பாதிப்புக்கு உட்பட்டு தரமிழந்து போகின்றன.

தெங்குப் பயிற்ச் செய்கையின் போது ஏற்படும் பீடைத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பூரண அறிவு பொதுமக்களிடையே போதுமான அளவில் இல்லை. இது தொடர்பாக அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையிலும் பீடையின் தாக்கங்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதையும் உள்ளடக்கியதாகக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் குறிப்பாகத் தென்னம் பயிர்ச் செய்கையாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். - இவ்வாறு அலுவலர் தெரிவித்தார். (ஒ-ரி)

# உடுவில் விவசாய சம்மேளனக் கூட்டம்

உடுவில் கமநல சேவை நிலைய விவசாய சம்மேளனங்களின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று முற்பகல் 11மணிக்கு நிலைய மண்டபக் கேட்போர் கூடத்தில் சம்மேளன சமாசத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தல், உள்ளீடுகளின் தேவைகள், கடன்கள் வழங்கல், சீடாதிட்டம், நியாப் திட்டம், உலக உணவுத் திட்டம், கமக்காரர் ஒய்வூதியத் திட்டம், விவசாயிகளின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட உள்ளன. (ஒ-152)

# பாவோதல் போட்டி

வலி.தெற்கு,செப்.27

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலயமட்ட சகலகலாவல்வி மாலை விருத்தப்பா ஓதல் போட்டி அடுத்தமாதம் 4ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ள வலய மட்டப் போட்டிக்கு முன்பாக கோட்டமட்டங்களில் போட்டிகளை நடத்தி இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக போட்டியாளர்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் பங்குபற்ற முடியும். (ஒ-152)

# வளர்ப்பு நாய்க்கு அனுமதி அட்டை பெறுவது குடாநாட்டில் அவசியம்!

## யாழ். அரச அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.27

குடாநாட்டில் நாய் வளர்ப்போர், வளர்ப்பு நாய்க்கான அனுமதி அட்டை பெறவேண்டும். அனுமதியின்றி எவரும் நாய் வளர்க்க முடியாது.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் நாய் வளர்ப்பு அனுமதி அட்டைத் திட்டத்தினை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதற்கான நடவடிக்கையினை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்கொள்வார். வளர்ப்பு நாய் அனுமதி அட்டைகளை உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் தயாரித்து நாய் வளர்க்கும் சகல குடும்பத்தவர்களுக்கும் வழங்க வேண்டும்.

வளர்ப்பு நாய் அனுமதி அட்டையின்றி வளர்க்கப்படும் நாய்கள் கட்டாக்காலிகளாகக் கருதப்பட்டு உள்ளூராட்சி அலுவலர்களால் அழிக்கப்படலாம் - என்றார் அரச அதிபர்.

வளர்ப்பு நாய் அனுமதி அட்டைக்கான கட்டணத்தை 50 ரூபாவாக நிர்ணயம் செய்ய வேண்டும் என வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் கேட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை வளர்ப்பு நாய் அனுமதி அட்டைத் திட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தி பிரதேச மட்டத்தில் இனங்காணப்படும் கட்டாக்காலி நாய்களை அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-185)

# யாழ். அஞ்சல் திணைக்களத்தில் உயர் நிலைப்பதவிகள் வெற்றிடம்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். மாவட்ட அஞ்சல் திணைக்களத்தில் உயர் நிலைப் பதவிகளாகிய பிரதி அஞ்சல் மா அதிபர், சிரேஸ்ட நிர்வாகச் செயலாளர், பிராந்திய நிர்வாக அலுவலர் ஆகிய பதவிகளும் நுண்ணாய்வுப் பதவியும் வெற்றிட மாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் பிரதி அஞ்சல்மா அதிபர் பதவி வகித்தவர். அண்மையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவரது இடத்திற்கு வேறொவரும் உடனடியாக நியமிக்கப்படவில்லை.

அஞ்சல் திணைக்களம் நீண்ட காலமாக பதவி உயர்வுகளை வழங்காமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. தற்சமயம் மேற்படி வெற்றிடங்கள் உள்ளதால் திணைக்களம் நிர்வாகத்தைக் கொண்டு செல்வதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

மாவட்டத்தில் பல முதலாம்தர அஞ்சல் அலுவலகங்களில் இரண்டாம் தர அஞ்சல் அதிபர்களாக பதில் கடமையில் உள்ளனர் என்றும் - குறிப்பிட்ட தொகை முதலாம் தர அஞ்சல் அதிபர்களே தற்சமயம் சேவையில் உள்ளனர் என்றும் -

அஞ்சல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-170)




# சட்டவிரோத மணல் அகழ்வால் வீதியைப் பயன்படுத்த முடியாதநிலை

நவாலி,செப்.27

ஆனைக்கோட்டையிலுள்ள காசிகாண்ட மடம், விஸ்வராதர் ஆலயம், நவாலி காத்த வராயர் ஆலயம் ஆகியவற்றை இணைக்கும் டச்சு வீதி தற்போது மக்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

இது விடயமாக அவ்வீதியைப் பயன்படுத்திவரும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டு யாழ். அரச அதிபர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், கமநல சேவை உதவி ஆணையாளர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த மகஜரில்:-

குறிப்பிட்ட வீதியை நமது முன்னோர்கள் நீண்ட காலமாகப் பாவித்து வந்துள்ளனர். யுத்த சூழ்நிலை ஏற்பட்ட காலத்திலிருந்து இவ் வீதியின் இருபக்கங்களிலும் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டுவருகின்றது. இதனால், இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த வீதியைத் தொடர்ந்தும் போக்குவரத்துக்குப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-100)




குடத்தனையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் உதவியுடன் பசுபிக் ஆசிய மூலவள நிலையத்தால் கடந்த 15 ஆம் திகதி படகுகள் அன்பளிப்பாகக் வழங்கப்பட்டன.

படகு வழங்கும் நிகழ்வில் பசுபிக் ஆசிய மூலவளத் திட்ட அலுவலர் ஒணோயமா லியோ பயனாளிகளுக்கு படகைக் கையளிப்பதை முதலாவது படத்திலும் -

படகு வழங்குவதன் நோக்கம் குறித்து அவர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சி.சுந்தரலிங்கம்)*

# அரச படையினரை ஜே.வி.பியினர் குறைகூறுவதை ஏற்கவே முடியாது

## சீறுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, செப்.27

ஜே.வி.பி. தென்னிலங்கையில் தனது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினரை குறைகூறுவதையும், படையினரின் தன்னம்பிக்கையை மழுங்கடிக்க முயல்வதையும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன. நேற்றுமுன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்காகக் கொழும்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆற்றிய உரை, மோசமான சதியொன்றின் வெளிப்பாடா என்று சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து நாட்டின் ஒருமைப்பாட்டை காக்க முடியாதுவிடின் அரச படைகளைக் கலைத்து விடுமாறு அச்சுறுத்தலான தொனியில் அவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

1988 - 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஜே.வி.பி. ஆரம்பித்த முயற்சிகளை நிறைவு செய்வதற்கான யோசனைகளா இவை? அக்காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்திய ஜே.வி.பி. அவர்களது குடும்பங்களையும் அச்சுறுத்தியது. இப்போது பாதுகாப்புப் படைக்கட்டமைப்பைக் கலைத்தால் புலிகள் வடக்குக் கிழக்கை இலகுவாகக் கைப்பற்றுவர். ஜே.வி.பிக்கும் தான் எதிர்ப்பார்த்தபடி தெற்கில் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ளலாம். இதுதான் ஜே.வி.பியின் மறைமுகத் திட்டம். பிரதமர் மஹிந்த இந்த மறைமுகத் திட்டத்தில் சிக்கிவிட்டார்.

சுதந்திரம் பெற்றது முதல் இன்றுவரை உள்ளக மற்றும் வெளிச்சக்திகளின் அச்சுறுத்தலில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு பாதுகாப்புப் படையினர் போற்றுதற்குரிய கடமைகளைச் செய்திருக்கின்றனர். நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தங்களது மேலான உயிரையும் அவர்கள் தியாகம் செய்திருக்கின்றனர்.

படைகளிலிருந்து விலகுமாறு கோரி ஜே.வி.பியினர் பாதுகாப்புப் படைகளில் அங்கம் வகித்த 1859 பேரைக் கொலை செய்தனர். தனது தோழர்களைப் பலிக்கடாக்களாக்கிவிட்டு லண்டன் சென்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்த சோமவன்ஸ அமரசிங்க இன்று மீண்டும் நாடுதிரும்பி இரத்தக் களரியொன்றுக்குத் தூபமிடுகிறார். மக்கள் ஜே.வி.பி யின் கடந்த கால கொடூரத்தை மறக்கவில்லை.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் படையினரைக் குறைகூறமுடியாது. சோமவன்ஸ அமரசிங்க போன்றோருக்கு இவ்வாறு குறைகூற எந்த அருகதையும் கிடையாது. நாட்டின் முக்கியமான பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாத நிலை இருக்கிறது. சிரேஷ்ட இராணுவத் தளபதியான ஜெனரல் கொப்பேகடுவவும் இந்த யதார்த்தத்தை உணர்ந்திருந்தார். இந்த நிலையில் தனது மேடைகளில் ஏறி இவ்வாறான கருத்தை வெளியிட்ட ஜே.வி.பி. தலைவரைப் பிரதமர் கண்டிப்பாரா? அல்லது இந்தப் பேச்சுக்காகப் பகிரங்க மன்னிப்புக்கோருமாறு பிரதமர் ஜே.வி.பி. தலைவரைக் கோருவாரா?

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)

### பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.27

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பதிவாளர் தரம்II இல் இலங்கை பூராகவும் 11 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட இந்த நியமனத்தில் 5 தமிழர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-202-204)

### பரிசளிப்பு விழா

வலி.தெற்கு,செப்.27

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலை திறந்தவெளிஅரங்கில் நடைபெற உள்ளன.

பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வு பெற்ற அதிபருமான கலாபூஷணம் சு.துரைசிங்கம் நிறுவுநர் நினைவுப் பேருரை ஆற்றுவார். (3-152)

### ஆளுமைவிருத்தி கலந்துரையாடல்

வலி.தெற்கு,செப்.27

ஜி.சீ.ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் எதிர்காலத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் ஆளுமைவிருத்தி தொழிற் பயிற்சி தேவைகளை இனம் காணுதல், தனியார் பாடசாலை சமூக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் வலிகாமம் வலய முறை சாரா கல்விப் பிரிவினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் இராமநாதன் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகிய மாணவர்களுக்கான கலந்துரையாடல்களை முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தி முடித்துள்ளனர்.

இளவாலை சென்.ஹென்றீஸ், மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரி ஆகியவற்றுக்கான கலந்துரையாடல்கள் விரைவில் இடம்பெறவுள்ளன. (3-152)

### கால்நடைகள் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,செப்.27

பளை, வண்ணான்கேணி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 39 பயனாளிகளுக்கு கால்நடைகள் வழங்கப்பட்டன.

உலக தரிசன நிறுவனத்தினர் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு இவற்றினை வழங்கியிருந்தனர்.

பளை தம்பகாமம் பொது மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வண்ணான்கேணி கிராமத்தைச் சேர்ந்த 29 பயனாளிகளுக்கு தலா இரண்டு மாடுகள் வீதமும், பத்து பயனாளிகளுக்கு தலா நான்கு ஆடுகள் வீதமும் உலகதரிசன நிறுவன பிரதிநிதிகளால் வழங்கப்பட்டன. (3-117)


MCS 324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)

1 Month-Speed Batches



- MS Office
- Visual Basic, VB Net, Java
- Accounting Package MYOB
- A+ Hardware Technician
- Microsoft Certified Professional
- Corel Draw, Page Maker, Photoshop
- Cool 3D, Flash, Premiere, HTML

*****Supported by UNDP/JRRP*****



தாதிப் பயிற்சி முடித்தோருக்கு U.K.இல் வேலைவாய்ப்பு

U.K.இல் உள்ள பிரபல்யமான Nursing Home இற்கு அரச சான்றிதழ் பெற்ற தாதிப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை உத்தரவாதச் சான்றிதழுடன் வேலைவாய்ப்பு.

மேலதிக தொடர்பிற்கு: T.P.:0776180082

E-Mail- K-Thushanthan @ hotmail.Com

V. அண்ணாமலை

"ஐங்கரன் இல்லம்"

சூராவத்தை, சுன்னாகம்.



மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய், சவுதிஅரேபியா ஆகியநாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
விமான நிலைய பொதி சுமப்பவர் (PORTER)
விமான நிலைய சுத்திகரிப்பு (CLEANING WORK)
கட்டிட தொழிலாளர்கள் (LABOURER)

பெண்களுக்குரிய வேலைவாய்ப்பு

சிங்கப்பூர், மலேசியா, ஆசியநாடுகளில் தமிழர்களின் வீடுகளில் பாதுகாப்பான தொழில்வாய்ப்பு.

1) வீட்டுப் பணிப்பெண்கள் (HOUSE MAID)
2) பிள்ளைகளை பராமரித்தல் (BABY SITTING)

மேல் குறிப்பிட்ட வேலைவாய்ப்பினைபெற்றுக்கொள்வதற்குரிய ஆலோசனைகள் எம்மால் வழங்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

RAIN BOW TRAVELS &TOURS

32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219,021,2223237


## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணிலே மலர்ந்தது 28 - 08 - 1972



மண்ணுக்காய் நிறைந்தது 27 - 09 - 1998

**கப்டன் நிருபா/ வினி**

(மகாதேவன் தர்சினி)

ஓயாத அலைகள் - 02

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி A/L 1991)

பகைவர்களின் மனம் குளிர
எங்கள் வீரவேங்கை
சாய்ந்ததல்லோ.

ஜெயந்தி என்டப்பிரைஸ்சஸ்,
'லக்ஸ்மன் வில்லா'
சந்தை வீதி, ஆவரங்கால், புத்தூர்.

பப்பா, அம்மா,
தங்கை பிரசாந்தி.

(45407) (21.11.18)

## முதலாவது வருட நினைவுகளில்

தோற்றம் 04 - 05 - 1980



மறைவு 08 - 10 - 2004

அமரர் **சேனாதிராஜா முகுந்தன்**

திதி: (27-09-2005) தசமி

எம் அன்பு முகம் மறைந்து - இன்று
ஆண்டுதான் ஒன்று சென்றதோ? ஆயினும்
அவன் நினைவுகள் என்றுமே எமைவிட்டு அழியாது

இல.81, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நா.தனபாலசிங்கம்
(பெரியப்பா).

(40421)(46-11-18)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் **சேனாதிராஜா முகுந்தன்**

தோற்றம் 04-05-1980 மறைவு 08-10-2004

திதி : (27.09.2005) தசமி

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓயவில்லை உம் நினைவு
என்றென்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
நீங்காத நினைவுடனே
உம் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மருந்தகம் + மெடிக்ஸ் +
நெஸ்கோ ஊழியர்கள்.

லயன் க.மு.பத்மநாதன்
குடும்பம்.

(சி/45295)(32-11-16)

# வவுனியாவில் அடுத்தமாதம் 27ஆம் திகதி மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு

வவுனியா,செப்.27

வவுனியாவில் மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி நடத்தப்பட இருப்பதாக நேற்றுமுன் தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியாவில் ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் பரவலாகப் பல இடங்களிலும் தொடர்ந்து இந்த நிகழ்வு நடைபெற்று வருவதாகவும், ஆரம்பித்த இடத்திலேயே மீண்டும் செய்யவேண்டும் என்பதற்கு அமைவாக மீளவும் வவுனியாவில் பெரும் எண்ணிக்கையான மக்களைத் திரட்டி இந்த நிகழ்வு நடத்தப்பட இருப்பதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்திற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரத்தினம் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள், வவுனியா பிரதேச செயலாளர் செல்வி சுகந்தி துரைசாமி மற்றும் பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று பலரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதை அடுத்து அகவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வவுனியாவில் நடைபெறவிருக்கும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுக்கு தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் எஸ். என். ஜீ.நாதன் தலைவராகவும், கிறிஸ்தோப்பர் செயலாளராகவும், ஏ.தேவராஜா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(க-164)

# கொள்ளைக்குப் பயன்பட்ட வாகனம் பொலீஸ் வசம்

காவத்தை, செப்.27

நிவித்திகல, அட்டவல்லப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

மாவனல்லை நகரில் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும் இடத்திலிருந்து மேற்படி வாகனத்தைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மூன்று பேரை மகரம பகுதியில் வைத்துப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி, நிவித்திகல பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(க-3)

# ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி விளக்கம் கொடுக்கின்றாராம் மஹிந்த!

கொழும்பு,செப். 27

"ஜே.வி.பியுடன் நான் செய்துள்ள உடன்படிக்கை வெறும் வார்த்தைகள்தான். நான் தமிழர்களின் போராட்டத்தை நியாயமானதாகவே கருதுகிறேன்" - எனத் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளாராம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

களனிப் பல்கலைக்கழக அரசியல் ஒப்பீட்டாய்வுத்துறை முன்னாள் பேராசிரியர் ஒருவரிடமே இவ்வாறு பிரதமர் தெரிவித்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

அந்தப் பேராசிரியரிடம் பிரதமர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புலிகளின் போராட்டம் நியாயமானது. இதற்குத் தீர்வும்வேண்டும். புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தாலேயே நிரந்தர சமாதானத்தை நோக்கி நம்மால் நகரமுடியும்.

இதற்குத் தடையாக இருந்தவர்கள் ஜே.வி.பி.யினர்தான். நான் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளேன். அது ஜனாதிபதித் தேர்தலுக்கானது. அவை வெறும்வார்த்தைகள். நான் சமாதானத்தைக் கொண்டுவருவேன். புலிகளுடன் பேசுவதைத் தவிர வேறு வழியே இல்லை. - எனத் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஆய்வு நோக்கில் விஜயம் செய்திருந்த அந்தப் பேராசிரியர் புலிகளின் நிர்வாகத்தை மெச்சினார். அவர்களின் பொருளாதார நடைமுறையையும் அவர் பாராட்டினார்.

நாட்டையே அவர்களிடம் கொடுத்தாலும் பொருளாதாரத்தை அவர்களால் சிறப்பாக மீண்டும் கட்டி எழுப்பவும் முடியும் எனவும் அந்தப் பேராசிரியர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக வெளியில் - ஜே.வி.பியினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் ஆதரவைப் பெற ஒன்றையும் -

தமிழர்களிடமும், சமாதானத்தை விரும்புவோரிடமும், அவர்களின் ஆதரவைப்பெற்றுக்கொள்ளப் புலிகளுடன் பேசி சமாதானத்தைக் கொண்டுவருவேன் என இன்னொன்றையும் கூறி, இரட்டை நிலையைக் கடைப்பிடிக்கிறார் பிரதமர் மஹிந்த என அவர் குற்றஞ்சுமத்துவது குறிப்பிடத்தக்கது.

(க-3)

# 6 தமிழ் இளைஞர்கள் சபுகஸ்கந்தவில் கைது

கொழும்பு, செப். 27

பியகம சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து கடந்த சனிக்கிழமை சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடினர் எனத் தெரிவித்து தமிழ் இளைஞர்கள் ஆறுபேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆறு இளைஞர்களும் பண்டாரவளை, அட்டாப்பிட்டிய எனும் இடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் -

தொழில் நிமிர்த்தமே இந்த இடத்திற்கு அவர்கள் வந்தனர் என்றும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக சபுகஸ்கந்தப் பொலீஸார் தெரிவித்தனர்.

(க-3)

# கத்தரீனா சூறாவளிப் பாதிப்பு நிவாரணத்துக்கு இலங்கை மேலும் 25ஆயிரம் டொலர் உதவி

வாஷிங்ரன்,செப்.27

கத்தரீனா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுமுகமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புஷ் - கிளின்டன் கத்தரீனா நிதிக்கு இலங்கை அரசு மேலும் 25ஆயிரம் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை வாஷிங்ரனிலுள்ள உலக வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனிடம் கையளித்தார்.

இதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் கத்தரீனா சூறாவளிப் பாதிப்புக் குறித்து அறிந்துகொண்டதும் இலங்கை அரசு 25 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை வாஷிங்ரனிலுள்ள அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கியிருந்தது. இந்த நிதிக்கான காசோலை, அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவர் பெர்னாட் ஒ.பி.குணத்திலகா மூலம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

(க-3)

# சு.கவின் கம்பஹா பிரமுகர்களுடன் பிரதமர் மஹிந்த பேச்சு நடத்தினார்

கொழும்பு,செப். 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

அலரிமாளிகையில் இந்தப் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஆகியன குறித்து இந்தப் பேச்சுகளின்போது பிரதமர் கலந்துரையாடியிருக்கிறார்.

பிரதமர் மஹிந்த கட்சி உறுப்பினர்களுடன் மேற்கொள்ளும் வழமையான சந்திப்பு இது வென அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சந்திப்பில் கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளரும் வெளிவிவகார அமைச்சருமான அநுர பண்டாரநாயக்க கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

(க-3)

# தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுத்தேர்தலைச் சந்தித்தால் பேரம் பேசும் சக்தி வலுவடையும்!

## 'நாடாளுமன்றில் அஷ்ரப்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் சிவாஜிலிங்கம் யோசனை



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நாட்டில் சிறுபான்மைத் தேசிய இனங்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரு தேசிய சிறுபான்மை முன்னணியின் கீழ் ஒன்றுபடவேண்டும்.

தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு போட்டியிடுவதன்மூலம் ஐம்பது முதல் அறுபது வரையிலான ஆசனங்களைப் பெற்று ,பெரும் பேரம்பேசும் சக்தியாக மாறலாம். இதற்கான அடித்தளத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் இட்டுச்சென்றுள்ளார்.

- இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

காலஞ்சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த சனிக்கிழமை கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவும், கௌரவ அதிதிகளாகப் பேரியல் அஷ்ரப், மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எச். மொஹமட், பாயிஸ், ஹஸன் அலி, சிவாஜிலிங்கம் ஆகியோரும், முஸ்லிம் காங்கிரஸின் துணைத் தலைவர் அப்துல் மஜீட், அமான் அஷ்ரப் உட்படப் பல பிரமுகர்களும், கட்சியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தீவின் வரலாற்றில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் நலன்களை முழுமையாக வழங்காத ஒரு சூழ்நிலையிலேயே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையை முன்னெடுத்து வந்தார்கள் என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது.

1983ஆம் ஆண்டிற்குப் பின் பிரித்தாளும் சக்திகளால் தமிழ், முஸ்லிம் மக்கள் மோதலில் ஈடுபட வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. அதனால், எத்தனையோ கசப்பான அனுபவங்களை நாம் பெற்றுள்ளோம். இதற்காக நாங்கள் பல தடவைகள் எங்களுடைய வருத்தங்களைத் தெரிவித்துள்ளோம்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் யாழ். முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட விடயம் தொடர்பாகக் குறிப்பிட்டார்.

இதற்கு மறைந்த தேசியத் தலைவர் அஷ்ரப்பிடம் நாங்கள் வருத்தத்தையும், மன்னிப்பையும் கோரியுள்ளோம்.

இதற்கு மேலதிகமாக கல்முனையிலே நடந்த முஸ்லிம் காங்கிரஸின் மாநாட்டில் உரையாற்றிய எங்களுடைய தமிழ்த் தலைவர்களுள் ஒருவரான சிவசிதம்பரம் முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பாத வரை நான் அங்கே செல்லமாட்டேன் என்று உறுதியாகக் கூறியதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம், அண்ணன் சிவசிதம்பரம் போன்றவர்களால் பாசத்துடன் அன்பாகப் பழகி, அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு தலைவராக மறைந்த அஷ்ரப் விளங்குகின்றார்.

1977இல் முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற ஒன்றை உருவாக்கி, முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர் ளை நிறுத்தி எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு மிகவும் உறுதுணையாக நின்றவர் அஷ்ரப்.

சிறுபான்மை இனங்களின் ஒரு பிரிவினரான முஸ்லிம் மக்களுடைய உரிமைக் குரலை ஓங்கி ஒலித்தவர் அஷ்ரப். அது அவரது சாதனை என்றே சொல்லமுடியும். அவரது குரல் ஓங்கி இருக்காவிடில் இன்றைக்கு முஸ்லிம்கள் தமது உரிமைக்காக இந்தளவுக்கு இந்த நாட்டிலே உறுதியாக நின்றிருக்க முடியாது.

அஷ்ரப்புடன் நாங்கள் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டோம். அவர் வடக்கு - கிழக்கு மாகாணம் இணைவதில் மிகவும் உறுதியாக இருந்தார். ஏழு கட்சிகளின் சார்பிலே நாங்கள் சிராவஸ்தியிலே அவரோடு பேச்சுகளை நடத்தினோம். அந்தவகையில் அவருடைய கருத்துகளை நாங்கள் புரிந்துகொண்டிருந்தோம்.



அவர் வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலே மிகவும் அக்கறையாக இருந்தவர்.

அவரது உணர்வுகளை அவரது ஒவ்வொரு உரையாடல்களில் இருந்தும் தெரிந்துகொண்டோம். அதை ஏற்றுக்கொண்டோம்.

எதிர்காலத்தில் அமையப் போவது ஒரு தனியரசாக இருந்தால் என்ன, ஒரு தனி மார்க்கமாக இருந்தால் என்ன, அதில் முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் சம அந்தஸ்தைப் பெற்றவர்களாக வாழக்கூடிய நிலைமை உறுதிசெய்யப்படும் . இதிலே விடுதலைப் புலிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உறுதியாக இருக்கின்றனர்.

முஸ்லிம் மக்களின் சம்மதமும் ஆதரவும் பெறப்படாத வகையில் எந்தத் தீர்விலும் சாத்தியம் இல்லை என்பதை நாங்கள் உணர்ந்துகொள்கின்றோம்.

நாங்கள் அடிமை விலங்குடன் அடிமைப்பட்ட இனத்திலிருந்து விடுதலைக்குப் போராடுபவர்கள். எனவே, இன்னொரு இனத்தை அடக்குவதற்கு எந்த விதத்திலும் எங்களுக்குத் தார்மீக உரிமை கிடையாது.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் எமது வடக்கு - கிழக்கு மலையகப் பிரதேசத்தில் சமஉரிமைகளோடு, சம அந்தஸ்தோடு வாழ வழிசெய்யவேண்டும் என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

- என்றார்.

(க-3)

# ரணிலின் அரசு வழங்கியதை ரத்துச் செய்தோரே மீண்டும் அதைச் செயற்படுத்தப்போகின்றனராம்

## வேடிக்கையானது என்கிறார் முன்னாள் கல்வி அமைச்சர் கொடித்துவக்கு

பாடசாலை மாணவர்களுக்கு முன்னாள் பிரதமர் ரணிலின் அரசு வழங்கிவந்த பகலுணவுத்திட்டத்தை இரத்துச்செய்துவிட்டு, தற்போது மீண்டும் மாணவர்களுக்கு பகலுணவு வழங்கப்போவதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருநாகலில் அறிவித்திருப்பது வேடிக்கையான விடயமாகும் என்று முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் சமூகத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் வாக்குறுதிகளை அள்ளிவீசிக்கொண்டிருக்கும். பிரதமர் மஹிந்த, முதன்முதலில் பாடசாலை மாணவர்களுக்கு பகலுணவு வழங்கியது ஐ.தே.க. அரசு என்பதை மறந்துவிட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1994ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த ஐ.தே.க. வழங்கி வந்த பகலுணவுத் திட்டத்தை நீக்கியது 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசே. இதனால் போஷாக்கின்மையால் வாடிய மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டது. ஆரம்ப நிலை வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2003ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தனது திட்டத்தின் மூலம் 18 மாதங்களில்.படிப்படியாக ஆரம்பநிலை வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் காலை ஆகாரம் வழங்க ஐ.தே.க. அரசு திட்டமிட்டிருந்தது.

இதற்காக 2003ஆம் ஆண்டில் திறைசேரி ஐந்து கோடி ரூபாவை ஒதுக்கியிருந்ததுடன் இதற்கென 2003ஆம் ஆண்டில் 4 கோடி இருபது லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2005ஆம் ஆண்டில் இதற்காக இருபது கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

உண்மையில் இத்திட்டத்தை நீக்காமல் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல இந்தக் கூட்டரசு முயன்றிருக்கவேண்டும்.

இன்று ஜனாதிபதி வேட்பாளராகியுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு - மீண்டும் இதே வாக்குறுதி அளிக்க நேர்ந்துள்ளமைக்கு காரணம், கடந்த அரசின் நல்லதிட்டங்களைக் கூட இந்த அரசாங்கம் தொடரமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையில் இருந்ததனாலாகும்.

- இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# இ.தொ.கா.- மு.கா. ஆகியவற்றின் ஆதரவின்றியே பிரதமர் வெல்வார்!

## ஜே.வி.பியினரின் ஆருடம் இது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ தீர்மானிக் கும் சக்திகளே அல்லவென்றும், அவற்றின் ஆதரவின்றியே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாக வெற்றியடைவாரென்றும் ஜே.வி.பி. திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரத மர் மஹிந்தவிற்கு ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் நேரடியாகவும், மறைமுகமாகவும் நிபந்தனைகளை விதித்து வரும் சூழ்நிலையில் அவர்களின் ஆதரவு இல்லாவிட்டால் பிரதமரின் நிலை என்ன என்பது பற்றிக் வினவியதற்கு - ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சந்திரசேன விஜேசிங்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஆட்சியைத் தீர்மானித்த காலம் மலையேறிவிட்டது. இப்போது அந்தக் கட்சிகளுக்குள் பிளவுகள், பிரச்சினைகள் உருவாகி கட்சிகள் இரண்டு மூன்றாகப் பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் துளியளவும் ஆதரவின்றித்தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சிஅமைக்கப்பட்டது. பிரதமர் மஹிந்தவிற்கு இவர்கள் ஆதரவு வழங்காவிட்டாலும் அவர் வெற்றி பெறுவது திண்ணம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இ.தொ.கா. முன்வைத்திருக்கும் 19 அம்ச நிபந்தனைகளை ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே ஏற்கமுடியும். எமது கூட்டமைப்பினால் அதனை ஏற்கமுடியாது -என்றார் அவர். (க-3)

### வகுப்பறைக் கட்டடம் நிறுவக் காணி கிடைத்தது

சங்கானை,செப்.27

சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடங்களும் விளையாட்டு மைதானமும் அமைக்கப்படவுள்ளன என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இதனை அமைப்பதற்கென 10 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் -

இந்தக் காணியை இப்பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டில் வசிக்கும் மக்கள் பதினொன்றரை லட்சம் ரூபாவிற்குக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர் என்றும் - அதிபர் மேலும் கூறினார்.

(எ-28-204)

### நெடுந்தீவில் சமய தீட்சை

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் சைவசமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஏழு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றிப் பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-204)





முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி இராஜ்கோபு - அருந்தவமலர்
தம்பதிகளின்
செல்வப் புதல்வன் ராகுல்
தனது முதலாவது பிறந்த நாளை சுவிற்ஸர்லாந்தின்
Luzern மாநிலத்தில் அமைந்துள்ள
Romanda,6162 - Entlubuch இல்
27.09.2005 இன்று வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகிறார். ராகுல் குட்டியை அன்பு அப்பா,
அம்மா, அம்மம்மா மற்றும் சுவிஸில் வசிக்கும் மாமா,
பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்கா மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்களும்
உடுப்பிட்டியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா,
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, மாமாமார்,
அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார்,
சித்திமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஸ்ரீ முருகன் அருள்பெற்று, பல்கலையும்
கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

27-09-2005

இமையாணன், உடுப்பிட்டி. தகவல்: திரு.திருமதி செல்வராஜா (பெரியப்பா, பெரியம்மா).

**தவறிவிட்டது**

81 ஸ்ரீ 5339 என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் மானிப்பாய் - நல்லூரிற்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும்.
தொடர்பு: P.விஜயரட்ணம்,
No.331/1, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் பாவனையில் உள்ள ELF-350 Aluminium body, ELF-250 Aluminium body, ELF-150 Route van, Toyota Town ACE ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:R.Selvanayagam
TP:.077 6454994.

**ACS**

**விசேட பிரிவுகள் ஆரம்பம்**

Diploma in MS Office
Diploma in Desktop Puplishing
Diploma in internet Techonology
Diploma in Hardware Engineering
A/L மாணவர்களுக்கான
GIT (General Information Technoglogy)

| | | |
|---|---|---|
| Batch I | 28.09.2005 | 10.00am |
| Batch II | 05.10.2005 | 09.00am |
| Batch III | 08.10.2005 | 04.00pm |

KOPAY JUNCTION, KOPAY.

**டிஜிற்றல் போட்டோ கொப்பி**


$A_4$ - கறுப்பு வெள்ளை -3 ரூபா
$A_4$ - கலர் 40 ரூபா

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.






சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த
இந்திரகுமார் - பிருந்தா
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
ஆகாஷ் தனது இரண்டாவது பிறந்தநாளை
இன்று (27-09-2005) செவ்வாய்க்கிழமை
யாழ்ப்பாணத்திலுள்ள தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா,
சித்தாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார், தாத்தாமார்,
பாட்டிமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்,
மச்சான்மார், தம்பிமார், தங்கைமார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஈஸ்வர விநாயகரின் அருள்பெற்றுப்
பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றார்கள்.
தகவல்: அம்மம்மா
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.



**ROOMAN TECHNOLOGY**

**Obviously,**

training does matter
when it comes to getting ahead of the pack.

Looking for hardware training that can successfully distinguish you from the rest of the pack?
Then get ready for the best Rooman Technologies, where the latest of internationally recognized courses,experienced faculty and state -of- the art infrastructure await to keep your career surging ahead.

**Courses offered**

☑ COMPTIA (A+, N+)
☑ MICSOFT (MCSA,MCSE)
☑ RED HAT (RH053, RHCT, RHCE)
☑ CISCO (CCNA,CCNP)
☑ CHECK POINT (CCSA, CCSE)
☑ ISS (ISS-CS, ISS-CE)
☑ EC-COUNCIL - CERTIFIED ETHICAL HACKER (CEH)

**100% JOBS ASSURED**

**Features at Governor's College**

Our lab consists of 3620, 2610 6*2501 7*1600 routers and 1924, 5000, 5500, Catalyst switches.

**Qualified and Training faculty from India.**

Free access to internet and a library consisting of a variety of books and journals of the latest editions.

**GOVERNOR'S COLLEGE**

376, Galle Road , Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail : governors@sltnet.lk



# செப். 30இல் 'பொங்குதமிழ்'

## பொங்குதமிழ் வெற்றிபெற கனடாவிலிருந்து வாழ்த்து

*அன்பான தமிழீழ உறவுகளே!*

இன்று எமது தமிழீழ மண்ணில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சி தமிழீழ மாணவர்களால் கருத்தரிக்கப்பட்ட ஓர் எழுச்சி. அந்த வகையில் தமிழீழ மாணவர் சமுதாயத்தினராகிய நீங்கள் நடத்தும் இந்தப் பொங்கு தமிழ் மாநாடு சிறப்புற அமைய கனடியத் தமிழ் இளையோர் அமைப்பினராகிய நாம் எமது உளமார்ந்த வாழ்த்துகளை இன்றைய பொழுதில் வழங்கி நிற்கின்றோம்.

கடந்த மூன்று வருடங்களாக எமது மண்ணில் நடைபெற்ற யுத்த நிறுத்தம் எமது மக்களுக்கு எந்தவித நலனையும் வழங்காத பொழுதிலும் புலம்பெயர்ந்து வாழும் இளம் சந்ததியினராகிய எமக்கு எமது தாய் நாட்டைப்பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது. அந்த வகையில் இலங்கைத்தீவில் ஒரு நிறைவான, மக்களின் தேவைகளை சரிவரப் புரிந்து நிறைவேற்றும் ஒரு தமிழீழ அரச கட்டமைப்பையும் அதன் தலைமையின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் உறுதியான மக்கள் சக்தியையும் நாம் கண்கூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

எமது தமிழீழ மண்ணில் இன்று நடைமுறையில் இருக்கும் இந்த தனியரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய தேவை இன்றைய காலத்தின் கட்டாயமாக ஏற்பட்டுள்ளது.

எமது மக்களின் துயரங்களைக் கொண்டு சர்வதேச அரசும் வாய்மூடி, கண்கட்டி மௌனம் சாதிப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை. எமது தனியரசுப் பிரகடனத்தை நாமே நிர்ணயிக்க வேண்டிய கட்டாயமும் அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுத்தர வேண்டிய பொறுப்பும் இன்றைய மாணவர் சமுதாயத்தினராகிய எமது கரங்களில் உள்ளது எனபதை நாம் நன்கு அறிவோம்.

வவுனியா, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப்பிரகடன நிகழ்வுகள் எமது மக்களின் அபிலாசைகளையும் ஆத்ம உணர்வுகளையும் வெகுவாக வெளிப்படுத்தி நின்றன. அதேபோல் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் பொங்கு தமிழ் அதி சிறப்புற அமைய பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து உங்கள் கரங்களை வலுவாகப் பற்றிக்கொண்டு எமது தமிழ் இளையோர் அமைப்பு கனடாக் கிளையின் சார்பில் மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

***தமிழ் இளையோர் அமைப்பு-கனடா***

*அன்பு உறவுகளே!*

உலகனைத்தும் உள்ள தமிழ் மாணவர் ஒன்றியங்களுடனும் இத்தருணத்தில் இணைந்து எமது ஒற்றுமையின் பலத்தை வெளிப்படுத்தி இந்தப் பொங்குதமிழ் நிகழ்வுக்கு எமது பூரண ஆதரவை வழங்கி நிற்பதில் கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களாகிய நாம் பெருமை கொள்கின்றோம்.

எமது தாயகத்தில் எமது மக்கள்படும் துயரங்களை வெளிக்கொணர்வதிலும் அவர்களுக்கு ஒரு நீதியான, நிரந்தரமான தீர்வை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற மாணவர் சமுதாயமாகிய எமக்கு மிகப்பெரும் கடமை உள்ளது என்பதை நாம் அறிவோம்.

அமைதியான முறையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் செப்ரெம்பர் 30ஆம் திகதி நடத்தவிருக்கும் இந்தப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு சிறப்புற அமைய எமது மனமார்ந்த வாழ்த்துகளை வழங்கி நிற்கின்றோம்.

கடந்த வருடம் கனடாவில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வு புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் உணர்வுகளை வெகுவாக வெளிப்படுத்தி நின்றது. எமது மக்களின் உரிமைக்கு நாம் என்றென்றும் குரல் கொடுப்போம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாக விளங்கியது.

இதைச் சர்வதேச சமூகம் உணர்ந்து தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க முழு மனதுடன் செயற்படவேண்டும் என்று சர்வதேச சமூகத்தை இத்தருணத்தில் வேண்டி நிற்கின்றோம்.

மீண்டும் ஒருமுறை இப்பொங்குதமிழ் நிகழ்வுக்கு கால்ரன் தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் எமது வாழ்த்துகளை வழங்கி நிற்கின்றோம்.

கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் மன்ற செயற்குழு,

***கால்ரன் பல்கலைக்கழகம், ஒட்டாவா. கனடா***

## பொங்குதமிழ் மைதானத்தில் தலைவரின் 30அடி 'கட்அவுட்'

### டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் உருவானது

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் முப்பது அடி உயரமான முழு உருவ 'கட் அவுட்' வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வில் 'டிஜிற்றல்' தொழில் நுட்ப முறையில் வடிவமைக்கப்பட்ட இந்த முப்பது அடி உயரமான தேசியத் தலைவரின் முழு உருவ 'கட்அவுட்' வைக்கப்படவுள்ளது. என்று தெிவிக்கப்பட்டது.

மருத்துவ பீட மைதானத்தில் அமைக்கப்படவுள்ள மேடையின் பின்னணியில் இந்த 'கட் அவுட்' வைக்கப்படவுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வுக்காக பிரமாண்டமான மேடை அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (9-7)

## ஓட்டோக்களில் எழுச்சிக் கொடிகள்

யாழ்ப்பாணம்,செப்.27

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வையொட்டி குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் மினி பஸ் மற்றும் ஓட்டோக்களில் பொங்குதமிழ் எழுச்சிக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (எ-7)

## பொங்குதமிழில் ஒன்று கூடுவோம்

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் முக்கியத்துவம் குறித்து வண.இ.ராஜ்குமார் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

ஒரு காலகட்டத்தில் சர்வதேசமும் அரசும் இந்த நாட்டில் பிரச்சினை இல்லை. இது ஒரு பகுதியினரின் பிரச்சினைதான். அது விடுதலைப் புலிகளுக்குரியது என எண்ணின .

ஆனால், இன்று இலங்கைப் பிரச்சினை என்பது மக்களின் பிரச்சினை - ஓர் இனத்தின் பிரச்சினை - இது விடுதலைப் புலிகளின் பிரச்சினை மட்டுமல்ல என்பதனை இன்று சர்வதேசங்கள் உணர்ந்துள்ளன. இதனை பொங்குதமிழும் மக்கள் எழுச்சியுமே ஏற்படுத்திக் கொடுத்தது.

எனவே, வருகின்ற பொங்குதமிழ் எங்கள் மக்களின் உயிர் மூச்சாகவும் பேச்சாகவும் பேசப்பட வேண்டும். எமது உரிமையை அடுத்தவர் மீட்டுத்தருவார் என்று காத்திருப்பதில் அர்த்தமில்லை. ஆகவே செப்.30 இல் எமது உரிமைகளை வலியுறுத்தி பொங்கு தமிழில் ஒன்று கூடுவோம். ஓர் இனத்தின் தேசிய சுதந்திரப் போரை நடத்துவதற்கு போராளிகள் மட்டும் இருந்தால் போதாது. சுதந்திரத்தைப் பற்றி ஆனந்தக் கனவுகள் கண்டு வீரக்கவிதை பாடக்கூடிய புலவர்களும் மக்களும் அறிவாளிகளும் வேண்டும் மலை பெயர்ந்தாலும் நிலை தளராத தீரர்கள் வேண்டும். இவைதான் சுதந்திரத்தை பருகத் துடிக்கும் மக்கள் சமூகத்திடம் காணப்படவேண்டும். அயர்லாந்து மக்களின் சுதந்திரப் போராட்டம் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கூறியவரிகள் இவை.

நாமும் ஆங்கிலேயரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆயினும், அவர்கள் நமது வீட்டில் குடிபுக ஒருநாளும் சம்மதிக்கமாட்டோம். நமக்கு வழி, நமது பாஷை, அதுவே நம் குணமாக அமைகிறது. உண்மையாகவே ஐரிஷ்காரன் யார்? ஆங்கிலேயரால் கலகக்காரன் என்று அழைக்கப்படுகின்றவனே என்று கூறினார் அயர்லாந்தின் தத்துவ ஆசிரியர் டிவெலாரா. இதுவே நமக்கும் பொருந்தும் - என்றுள்ளது. (ஒ)

## தீயேந்தி ஆடுவோம்! உரிமையைப் பெறுவதற்காக!

''கடற் சுதந்திரம் எமக்கு முக்கியம் வேணும் நாங்க வருவம்'' 'எங்கட கடல் எமக்கு வேண்டும்''

''எங்கட வீட்டில் அவன் இருக்க ஏலாது நாங்கள் தான் இருக்க வேணும்''

''பொங்குதமிழ் எங்கட கொண்டாட்டம்''

''கட்டாயம் பொங்குதமிழுக்கு போகவேணும் எண்ட உணர்ச்சி வருகிறது''

''போன முறை பொங்குதமிழ் பார்க்க இல்லை இந்த முறை பார்ப்பம்''

''ஒருவார்த்தை ஓம் எண்டு சொன்னால் போதும் எல்லாம் பிடுங்கி எறிஞ்சு அவங்களைக் கலைப்பம்''

''எங்கட கடலில் நாங்க நிற்கிறம், உனக்கு இங்க என்ன வேலை''

இவை அரங்காலயத்தில் ஒலித்த குரல்கள். பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் பெண் செயலாளிகளுக்கு நடத்தப்பட்ட அரங்காலயம் நிகழ்வு 25-09-2005 யாழ்ப்பாணம், கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குடாநாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து ஒன்று கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பண்பாட்டு மைய செயலாளிகள் தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரி எழுச்சி கொண்டனர்.

அரங்க விளையாட்டு, அரங்க எழுச்சி பாடல்களாலும் தம் உணர்வுகளை வெளிக்காட்டி நின்றனர்.

எமது தலைவர் - பிரபாகரன்

எமக்கு வேண்டும் - தமிழீழம்- என உரத்த குரல் எழுப்பியும் கைகளை உயர்த்தியும் கோஷமிட்டனர். வேற்று நாட்டவர்களைப் போல் வேடமணிந்த அரங்க செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த ஆற்றுகையாளர்கள் ஒன்று திரண்டு குரல் எழுப்பி நின்ற மக்கள் மத்தியில் நுழைந்த போது பெண்கள் ஆரவாரித்தனர்.

'இது எங்கட பொங்குதமிழ்' என ஆவேசங் கொண்டாடினார்கள்.

எனவே, பொங்குதமிழின் தேவையும் அவசியமும் மக்களினால் உணரப்பட்டு, எழுச்சிகொண்ட நிலையில் உள்ளது. தேசமெங்கும் சிலிர்த்து நிற்கும் நாளிற்காக அனைத்து மக்களினதும் ஒன்றுகூடலின் உரத்த குரல் ஓங்கி ஒலிப்பது வானதிரும் எம் தாயக விடுதலை எம் கரங்களை முட்டும்.

***-பெண்கள் பண்பாட்டு மையம்***

## தமிழர் அனுபவிக்கும் இன்னல்களுக்குத் தீர்வுகாண பொங்குதமிழில் திரண்டு குரல் கொடுப்போம்

ஈழத்தமிழ் மக்களின் வரலாறு இன்று ஒரு திருப்புமுனையில் நிற்கின்றது. ஈழத் தமிழர் என்ற தனித்துவம் கௌரவத்துடன் பேணப்படும் எதிர்காலத்தை உறுதிப்படுத்தித் திட்டவட்டமான அரசியல் கட்டமைப்பை நிலைநாட்டும் காலம் வந்துவிட்டது.

ஒன்றுதிரண்டு, ஒரே குரலில் தமது உறுதிப்பாட்டை அனைத்துலக சமூகத்திற்கும் இதனை எடுத்துக்கூறவேண்டும். இதற்கேற்ற சந்தர்ப்பமாகிய அனைத்துத் தமிழ் மக்களும் சகலவிதமான அமைப்புகளும் பங்குபற்றி, இக் குரலைப் பலத்த முழக்கமாக்கவேண்டும்.

சர்வதேசச் சமூகம் எங்கள் நிலைப்பாட்டை ஆதரித்து அங்கீகரிக்கவேண்டுமென்று நாம் கேட்கும் இவ்வேளையில், அச்சமூகத்திற்குச் சில விடயங்களை நினைவூட்ட வேண்டியுள்ளது.

(1) ''பிரிவினைவாதம்'' தமிழ்மக்களுடையதல்ல; பெரும்பான்மைச் சமூகத்தினருடையதே.

(2) நாம் இழந்த இறைமையையே மீளப்பெற விழைகின்றோம்.

'' இலங்கையர் சமன் சிங்கள பௌத்தர்கள்'' என்ற பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ் மக்களை இலங்கை அரசியலிலிருந்து புறந்தள்ளிவிட்டார்கள். முதலில் மலையகத் தமிழ் மக்களின் பிரசாவுரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பறித்து, நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களின் செல்வாக்கைச் செயலிழக்கச் செய்தார்கள்.

1920 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைச் சிங்களவரும் தமிழரும் ஒன்றாக, சமமாக, எதிர்த்து, ஒன்றாக சமமாக முன்னெடுத்த ''சுயபாஷை'' இயக்கத்தை, சுதந்திரம் பெற்றபின் ''தனிச்சிங்களம்'' என்ற சட்டம் மூலம் கொச்சைப்படுத்தி, தமிழையும் தமிழ் மக்களையும் ஒதுக்கிவைத்தனர்.

இதன் விளைவாக, கல்வி, பொதுச்சேவை, அரசநிறுவனங்களுடனான தொடர்பாடல் போன்றவற்றிலிருந்து புறந்தள்ளி வைத்தார்கள்; அரசின் திட்டமிட்ட அனுசரணையுடன் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்களை உருவாக்கித் தமிழ்மக்களுக்குப் பாதகமான முறையில் அப்பிரதேசங்களிலே இனவிகிதாசாரத்தை மாற்றியமைத்தார்கள்.

தரப்படுத்தல் என்ற ஒழுங்கு மூலம், தமிழ் மக்களின் அதிமுக்கிய செல்வமாகிய கல்விச் செல்வத்துக்கு முடிவுகட்டத் துணிந்தார்கள். தமிழ் மக்களின் கலாசாரச் சின்னங்களை - யாழ். பொதுநூல்நிலையம் போன்ற சின்னங்களை - எரித்து ஒழித்தார்கள். சிறுவர்கள், முதியோர், நோயாளிகள், அகதிகள் எனப்பாராது, பாடசாலைகள், வயோதிபர் இல்லங்கள் மீதும், வீடுகள், பொதுக்கட்டடங்கள் மீதும், பரவலாகக் குண்டுமாரிப் பொழிந்து இனஒழிப்பில் ஈடுபட்டார்கள்.

சிறியளவிலான அதிகாரப்பகிர்வுகளை முதலாக மறுத்து ஒற்றையாட்சியை நிறுவினார்கள். அண்மைக்காலத்தில் ''இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை'' முன்மொழிவை எதிர்த்தார்கள். ஆழிப்பேரலை கடற்கோள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட, மனிதாபிமான அடிப்படையிலான, கூட்டமைப்பைக் கூட ஏற்கமுடியாதென்று புறக்கணித்துவிட்டார்கள்.

இப்போது '' தமிழினம் என்ற தனித்துவம் இல்லை; தமிழரின் மரபுவழித் தாயகமென்ற பிரதேசமில்லை'' என்று கூறுமளவுக்குப் பேரினவாதம் வளர்ந்து, தமிழ்மக்களைப் புறந்தள்ளி நிற்கின்றது. இவ்வாறு ''பிரிவினை வாதத்தை'' முன்னெடுத்துச் சென்றுள்ளவர்கள் தமிழ் மக்களல்ல, சிங்களப் பெரும்பான்மையினரே. தமிழ்மக்களின் சுயத்தை மதிப்பதற்கான மனப்பாங்கு சிங்கள அரசியற் சமூகத்திடம் இல்லை; பேரினவாதத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய மனத்துணிவும், சாதுரியமும் உள்ள தலைவர்களும் அவர்களிடம் இல்லை என்பது வரலாறு எடுத்துக்கூறும் உண்மை.

***வண.பிதா அ.இ.பேணாட், தலைவர்***
***யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு***

## இணுவாலை சிறுவிளான் கிராயிட்டி ஞானவைரவர் ஆலய 1008 சங்காபிஷேக நிகழ்வு

திகதி: -நாளை (28-09-2005) புதன்கிழமை
நேரம்:-காலை 8 மணிக்கு ஆரம்பம்
குறிப்பு: அன்னதானம் வழங்கப்படும்.

(சி/45311) (24-16-34) **ஆலயப் பரிபாலன சபை.**

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பார்த்திப வருடம் புரட்டாதி மாதம் 3 ஆம் நாள் 19.09.2005 திங்கட்கிழமை மாலை அபரபக்கத் துதியைத் திதியில் சிவபதமெய்திய

**சிவஸ்ரீ.சோ.நடராஜக் குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| தசாகம்: | 28.09.2005 புதன்கிழமை மு.ப.9 மணி |
| ஏகோதிஸ்டம், மாசிகம்: | 29.09.2005 வியாழக்கிழமை |
| சபிண்டிகரணம்: | 30.09.2005 வெள்ளிக்கிழமை |
| கிருஹயக்ஞம்: | 01.10.2005 சனிக்கிழமை |

மேற்படி கிரியைகளிலும் 01.10.2005 சனிக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் தங்கள் குடும்பத்தினரையும் தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டநாதர் றோட்,
புதிய செங்குந்தா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(40474)
(39-16-34-24)
**குடும்பத்தினர், உறவினர்கள்.**

## யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் நியமனம்

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களின் அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றும் எஸ்.பி.இராசதுரை மேலதிகமாக யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த 16ஆம் திகதிமுதல் இவர் இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேற்படி கடமையுடன் தபால் திணைக்களத்தின் வட பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகவும் பணிபுரிவார் என்று தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்) (3-202)

## சாயி அவதாரத் திருவிழா

சீரடி சாயிபாபா அவதாரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சத்சரிதம், ஹோமம், பஜனை, விசேட ஆத்மீக உரை என்பன இடம்பெறும். (3-202)

## எழுச்சிப் பேரவை உறுப்பினர்களின் கலந்துரையாடல்

உடுவில், தெல்லிப்பழை பிரதேசங்களைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயிலுக்கு அருகில் இடம்பெறவுள்ளது

இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாக இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமக் கோட்டச் செயலாளர் ந.சாம்பசிவம் கேட்டுள்ளார். (எ-86)


யாழ். நகரில் மீண்டும் ஒரு புதிய உதயம்!!



- குறைந்த கட்டணம்
- குறுகிய கால விநியோகம்
- உங்கள் உறவுகளின் கைகளுக்கு....

உள்நாடு வெளிநாடுகளுக்கு துரித கடிதம், பொதிகள், அன்பளிப்பு பொருள்கள் மற்றும் வீடியோ பிரதிகள் எதுவானாலும் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ..சமுன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993



# UNIVAC
## Software Engineering Park

இங்கிலாந்தில் உள்ள Oracle நிறுவனம் யுனிவெக் நிறுவனத்துடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் கணனி மென்பொருள் வடிவமைப்பு மையத்தினை ஆரம்பிக்க உள்ளது. இதனால் 100 பேருக்கு கணனி மென்பொருள் வடிவமைப்பு துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதற்கான நேர்முகத்தேர்வு விரைவில் நடைபெறவுள்ளது
தகைமை : A/L 3 Pass (Computer Programming படித்திருக்க வேண்டிய அவசியமில்லை)
அனைவருக்கும் Software Engineering பயிற்சி வழங்கப்படும். அடிப்படை சம்பளம் 200 ஸ்டேலிங் பவுண்.

**உங்கள் நேர்முகத் தேர்விற்கான நேரத்தினை பதிவு செய்து கொள்ளவும். மேலதிக விபரங்களிற்கு**

**யுனிவெக் கணனிப்பயிற்சிக் கல்லூரி**
இலங்கை வங்கி அருகில் சங்கானை T.P: 077-6176476



18 +plus Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

18 Plus இன் இரட்டிப்பு போனஸ்



**மிகவும் வசீகரமான, இளம் பருவத்தினரின் சேமிப்பு திட்டத்தில் இன்றே சேமியுங்கள்.**
**நவ நாகரிகமான Document Holder ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.**

இன்றைய இளைஞர்களுக்கான வசீகரமான சேமிப்பு திட்டம் 18 Plus கணக்கு ஆகும்.

இச்சேமிப்பு திட்டமானது ஏனைய சேமிப்பு கணக்குகளை விட உயர்ந்த வட்டி வீதமும் பல வகையான அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

கல்லூரி, பல்கலைகழகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கான Document Holder ஒன்று மேலதிக இலவசமாக வழங்கப்படும்.

இந்த நாகரிகமான Document Holder ஐ பெறுவதற்கு இன்றே நீங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கியில் ஆகக் குறைந்த தொகையான ரூபா. 5000/-* வைப்பிலிட்டு புதிய 18 Plus கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

**விரையுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.**

*விதிமுறைக்களுக்கமைய

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

Twin Advertising

# கிளிநொச்சியில் போரினால் அழிந்த வீடுகளைப் புனரமைக்க நிதியுதவி

கிளிநொச்சி,செப்.27

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மானத் திட்டத்தின் கீழ் போரினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க நிதியுதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன என்று மேற்படி திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் கீழ் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சேதமடைந்த வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன. பளை பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 48 முழுமையாகச் சேதமடைந்த வீடுகளும் 8 பகுதியாகச் சேதமடைந்த வீடுகளும் -

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 199 முழுமையாக சேதடைந்த வீடுகளும் 45 பகுதியாகச் சேதமடைந்த வீடுகளும் -

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 62 முழு மையாகச் சேதமடைந்த வீடுகளும் 15 பகுதியாகச் சேதடைந்த வீடுகளும் -

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 99 முழுமையாகச் சேதமடைந்த வீடுகளும் 25 பகுதியாகச் சேதமடைந்த வீடுகளும் - இனங்காணப்பட்டுள்ளன.

முழுமையாகச் சேதமடைந்த ஒரு வீட்டுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதித் தொகை 4 கட்டடங்களாக வழங்கப்படும். தற்போது அந்தத் தொகையில் மூன்று கட்டடங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பகுதியாகச் சேதமடைந்த வீடுகளும் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

(த-352-204)




முழங்காவில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி, 3ஆம் கட்டமாக ஒரு தொகுதி சூரியமின்கலங்களை அண்மையில் கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. பயனாளிகள் தாம் பெற்ற சூரிய மின்கலங்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம் வெள்ளாங்குளச் செய்தியாளர்)*

## கனகராயன் குளத்தில் கிராமிய தற்காப்புப் பயிற்சி

புளியங்குளம் ,செப்.27

வவுனியா வடக்கு ,கனகராயன் குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கிராமிய தற்காப்புப் பயிற்சி நடைபெற்றது.

கனகராயன்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் அழகரசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தையாரான முத்தையா ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி அலையும் ஈகச்சுடரினை கனகராயன்குளம் வர்த்தக சங்கத் தலைவர் இ.வைகுந்தநாதனும் ஏற்றினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து சிறப்புரையினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி அலை வழங்கினார். இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள் மற்றும் கிராமமக்கள் உட்பட இருநூறிற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

(எ-355)

## முள்ளியவளை வித்தியானந்தாவில் 97 மாணவர்கள் பல்கலைக்குத் தெரிவு

முல்லைத்தீவு,செப்.27

அண்மையில் வெளியான ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் முள்ளிவளை வித்தியானந்தாக் கல்லூரி சிறந்த பெறுபேற்றைப் பெற்று மாவட்டத்தில் முன்னணியில் உள்ளது.

இந்தப் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 139 மாணவர்களுள் 97 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளனர்.

உயிரியல் துறையில் பா.மஞ்சுதனும் வர்த்தகத்துறையில் கி.நிருஷாவும் 3 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர். கனிதத் துறையில் ச.மாலவன், ப.இளங்கோ ஆகியோர் மாவட்டத்தில் முறையே முதலாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இவ்வாண்டு பல்வேறு துறைகளுக்குமாக சுமார் 35 மாணவர்கள் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுவர் என கல்லூரி அதிபர் ஜே.பி. கணேஷ் தெரிவித்தார்.

(ஐ-202)




## கட்டுமானப் பணிகளுக்கு பிரதேசசபை அனுமதி தேவை

### புதுக்குடியிருப்பு விசேட ஆணையாளர் அறிவிப்பு

புதுக்குடியிருப்பு,செப்.27

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கட்டுமானப் பணிகளுக்கும் பிரதேசசபையிடம் அனுமதி பெறவேண்டும்.

புதுக்குடியிருப்புப் பிரதேச விசேட ஆணையாளர் சி.தயானந்தா இவ்வாறு அறிவுறுத்தியுள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச சபையிடம் அனுமதி பெற்றபின்னரே எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனுமதிபெறாது கட்டடங்களை நிறுவுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கான அனுமதிச் சான்றுகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையினர் தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று மேலும் தெரிவித்தார்.

(எ-353-203)

## 'நிகொட்' திட்டத்தின் உதவியுடன் ஒதியமலையில் அபிவிருத்திப் பணிகள்

புளியங்குளம்,செப்.27

முல்லைத்தீவு மாவட்ட எல்லைக் கிராமமாக ஒதியமலையில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு 'நிக்கொட்' திட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியைப் பயன்படுத்தி சமூக வலுவூட்டல், கிராமிய அமைப்புகளைப் பலப்படுத்தல், கால்நடை வளர்ப்பு, தையற்பயிற்சி, விவசாயக் கடன், இளைஞர் பயிற்சி, வீதி புனரமைப்பு, பொதுக்கிணறு அமைப்பு, மலசலகூடத்திற்கு மானியம் வழங்கல், குளம் புனரமைப்பு உட்படப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'நிக்கொட்' திட்டத்தின்கீழ் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனம் இந்த அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்தி வருகின்றது.

(எ-355)



வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சு நடத்திய கிராமிய நடன விசேட நிகழ்ச்சி அண்மையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஒஸ்வால்ட், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் திருமதி எஸ்.மகேஸ்வரன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி ஆகியோர் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதையும் கிராமிய நடன நிகழ்வு ஒன்றையும் படங்களில் காணலாம். (எ)

## தியாகி திலீபன் நினைவாக மயானத்தில் சிரமதானம்

கிளிநொச்சி,செப்.27

தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பொதுமயானத்தில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

திருநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்த மயானம் பற்றைகள் நிறைந்து காணப்பட்டது. இதனால், இறுதிக்கிரியைகள் செய்வதற்காக இங்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் தியாகி திலீபன் நினைவாகச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(எ-301-202)

## தியாகி திலீபனின் நினைவாக வன்னியில் பரவலாக நிகழ்வுகள்

கிளிநொச்சி,செப்.27

தியாக தீபம் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வன்னியில் பல பிரதேசங்களிலும் பல்வேறு நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றுள்ளன.

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் முல்லைத்தீவு தென்னியங்குளம் அ.த.க. பாடசாலையில் நினைவு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

ஐயங்கன்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் அபிவிருத்திக் குழுத்தலைவர் புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிராம சேவையாளர் வீ.இராசரெத்தினம், பாடசாலை அதிபர் தி.மகாலிங்கம் ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடியை மருத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் ஏற்றினார்.

நிகழ்வில் மருத்துவக் கருத்தூட்டல், கண்காட்சி என்பனவும் இடம்பெற்றன.

ஒட்டுசுட்டான் நகரிலும் திலீபனின் நினைவு தின நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிலும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் அறுமுகத்தான் புதுக்குளம் பாடசாலையில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

அபிவிருத்திக் குழுத் தலைவர் யோ. மோகனராஜா தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் பற் சிகிச்சை, பொது மருத்துவம், குழந்தை மருத்துவம் போன்ற சேவைகள் இடம் பெற்றன. விழிப்புணர்வும் கருத்தரங்களும் நடத்தப்பட்டுள்ளன.

(எ-304)

## வவுனியா முகாம்களில் வசிப்போரை படிப்படியாகக் குடியமர்த்த ஏற்பாடு

ஒட்டுசுட்டான், செப்.27

வவுனியா நலன்புரி நிலையங்களில் வசிக் கும் மக்களை படிப்படியாகத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை வவுனியா மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையின் திட்டமிடற் பணிப்பாளர் திருமதி எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா கல்நாட்டினகுளம், தரணிக்குளம், செட்டிக்குளத்தின் கந்தசாமிநகர் ஆகிய பகுதிகளில் இம்மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கென சர்வதேச நிதி நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் நிதியுதவியினை வழங்க முன்வந்துள்ளன.

முதற்கட்டமாகத் தரணிக்குளம், கல்நாட்டினகுளம் ஆகிய பகுதிகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-341-202)

"நீங்கள் என்ன கதைக்கிறதெண்டாலும் சரி ஆனால் பிள்ளைகளுக்க அடிக்கவேண்டாம் எண்டு மட்டும் சொல்லாதீங்க இந்த ஏரியாப் பிள்ளைகளப் பற்றி உங்களுக்குத் தெரியாது. தடியெடுக்காட்டி உதுகளக் கட்டுப்படுத்தவே ஏலாது." – ஒரு ஆசிரியர்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒரு பிள்ளையை நாம் அடிக்கும் போது அப்பிள்ளைக்கு வேதனை அவமானம், ஆத்திரம், பதகளிப்பு, வஞ்சம் தீர்க்கும் எண்ணம் ஆகியனவே ஏற்படும். நாம் விரும்பும் மாற்றங்களல்ல - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

? பெற்றோர்களே! ஆசிரியர்களே!! தண்டனையால் நீங்கள் நிறைவேற்ற விரும்புவதை மாற்றி அன்பாலும் ஆதரவாலும் செயற்படுத்த முன் வருவீர்களா?

**உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 05 நாட்களே உள்ளன.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 - 12 - 1942



மறைவு
08 - 10 - 2004

அமரர்

### சபாரத்தினம் விவேகானந்தர்

*(முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)*

*அன்பால் எமை அணைத்து அறிவால் எமை உயர்த்தி*
*பண்பால் பலர்போற்ற பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!*
*ஆறாதப்பா உங்கள் பிரிவு*
*என்றும் உங்கள் நினைவு நிலைத்திருக்கும்.*

இன்று (27.09.2005) செவ்வா[illegible]மை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் [illegible]ல் நடைபெறும் அன்னாரின் ஆத்ம[illegible]ார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெற[illegible]பாசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அ[illegible]ும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(40478)(21)

## மரண அறிவித்தல்

### பொன்னையா ஆறுமுகராசா



**(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)**

புளியங்கண்டு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற தபால் ஊழியர் பொன்னையா ஆறுமுகராசா நேற்று (26.09.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் யோகராசா (பல.நோக்கு கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம்), தவலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும் உதயராணி, ஸ்ரீதரன் (உரிமையாளர், துர்க்கா களஞ்சியம் கொக்குவில்) ஆகியோரின் மாமனாரும் யோதீஸ், உமாந்தினி, அரவிந்தி, கிருஷ்ணா, வைஷ்ணவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கரையான்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*புளியங்கண்டு ஒழுங்கை,*
*ஆனைக்கோட்டை. T.P.: 0713055904*

(40489)(30-11-18)

தகவல்:
மகன், மருமகன்.

## வீடு புகுந்து தாக்குதல்

தென்மராட்சி, செப்.27

இனந்தெரியாத கும்பல் வீடுபுகுந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று இரவு சரசாலை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் உதயமலர் (வயது 48) அவரது மகள்களான தர்சினி (வயது 18) ஜெயரஞ்சன் சுபாஜினி (வயது 28) சுபாஜினியின் கணவனான பொன்னுத்துரை ஜெயரஞ்சன் (வயது 31) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(ஓ-117)

## சண்டிலிப்பாயில் சிறுவர், முதியோர் தினம் அனுஷ்டிப்பு

வலி.தெற்கு,செப்.27

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் அடுத்தமாதம் முதியோர், சிறுவர் தினத்தை சிறப்பாக அனுட்டிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் பொருட்டு 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்டு வருவதாகவும்-

முதியவர்கள் நடைபெறவுள்ள முதியோர் - சிறுவர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டவுள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கிடையில் - மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக மிகவும் கஷ்ட நிலையிலுள்ள - ஆதரவற்ற அனாதைப் பிள்ளைகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பெயரில் சமுர்த்தி வங்கியில் ஆயிரம் ரூபா வைப்பில் இடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)


### உடன்தேவை

சமையல் உதவியாளர்
உணவு பரிமாறுபவர்
28.09.2005 அன்று
காலை 11 மணிக்கு சமுகமளிக்கவும்
முகவரி:
Cosy Restaurant & Hotel.
No.15, Sirambiyady Lane,
Jaffna. 021. 222 5899

(40480)(30-11-18)


## மரத்திலிருந்து வீழ்ந்து சிறுவர்காயம்!

தென்மராட்சி,செப்.27

மரக்கிளையில் அமர்ந்து நாவற்பழம் பறித்த இரு சிறுவர்கள் கிளை முறிந்ததில் கீழே விழ்ந்து காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்து ச.பிரசாந் (வயது-14), நிஷாந்தன் (வயது - 14) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற வருகின்றனர்.

இதேவேளை- வீட்டுக் கூரையினுள் புறாப்பிடிக்கச் சென்ற சிறுவன் தவறி வீழ்ந்து தலையில் காயமடைந்தான். சரசாலையைச் சேர்ந்த சி.மதிவதனன் (வயது - 5) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஓ-117)

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணபிள்ளை கனகரத்தினம்



அம்பாறை, கல்முனையைப் பிறப்பிடமாகவும், 81, கலைமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கனகரத்தினம் அவர்கள் நேற்று (26.09.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் யுகவதி (முன்னாள் தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, பொன்னுத்துரை, உமையவல்லி ஆகியோரின் அன்பு மருமகனும் ரூபசுதர்சினி, ஆதீத்தன், விஜயசங்கர் (சென். ஜோன்ஸ் கல்லூரி, மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகநாதன், கமலாதேவி, சீதேவி, பேரின்பநாயகம் (கோப்பாய், அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புவனேஸ்வரி, பத்மநாதன், பவானி, ரவீந்திரநாதன், உதயகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனகக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*81, தலைமகள்வீதி,*
*அரியாலை.*

(சி-45313)(30-11-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி கதிரிப்பிள்ளை முத்தாச்சி *(முத்தம்மா)*

அல்வாய் கிழக்கு, துலாவையைப் பிறப்பிடமாகவும் நவனந்தோட்டம், அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரிப்பிள்ளை முத்தாச்சி அவர்கள் நேற்று (26.09.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாபிள்ளை - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அம்பலவாணர் கதிரிப்பிள்ளை (காசிப்பிள்ளை- ஓய்வுபெற்ற சிறாப்பர், ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா) அவர்களின் அன்பு மனைவியும் கனகாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (கணக்காளர்- ம.பெ.தோ. அ.சபை, குருநாகல்), சுசிலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சீவரத்தினம் (கனடா), பரமேஸ்வரி, துரைராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் வசந்தா, ஜேயந்தகுமார், கீதா, உதயகுமார், ராஜ்குமார், சிறீகாந்தன், காந்தரூபன், காலஞ்சென்ற அனுசூயா, பிரஜீவ், பிரதீபா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவனந்தோட்டம்,*
*அல்வாய்.*

(40484)(30-11-18)

தகவல்:
அ.காசிப்பிள்ளை (கணவர்)

### திருமதி குமாரசாமி கமலாம்பிகை



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கமலாம்பிகை அவர்கள் நேற்று (26.09.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் பாசமிகு மனைவியும், சண்முகவடிவேல், காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் பிறைசூடி, உருத்திரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகலாவின் மாமியாரும், கஜீவன், தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

(40481)(30-11-18)

தகவல்:
பிறைசூடி,
உருத்திரேஸ்வரன்.

### சண்முகம் சிவராமன்

[ஸ்ரீலங்கா அச்சகம் (இலங்கையன் அச்சகம்)]



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 71A, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவராமன் (இலங்கையன் அச்சக உரிமையாளர்) நேற்று (26.09.2005) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் மாலினியின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

71A,புங்கங்குளம்,
கொழும்புத்துறை
T.P:.021-2227954

(40477)(30-11-18)

தகவல்:
மனைவி - மாலினி சிவராமன்.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

## உள்ளம் நிறைந்த வாழ்த்துகள்

எமது கல்லூரித்தாய்க்கு க.பொ.த. உயர்தரம் (2005) பரீட்சையில் தம் சாதனைகள் மூலம் பெருமை சேர்த்த இந்துவின் மைந்தர்கள்.



★ சிவப்பிரகாசம் மயூரன் (கணிதம் முதலாம் நிலை)



★ பொன்னுத்துரை சிவபாலன் (உயிரியல் 2ஆம் நிலை)



★ நாகேந்திரம் பானுகோபன் (கணிதம் 4ஆம் நிலை)



★ சபாநாதன் தனேசன் (கணிதம் 5ஆம் நிலை)

இவர்களை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் உயர்தரப் பரீட்சை 2005இல் தோற்றி சித்தியடைந்த இந்துவின் மைந்தர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

✱ சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இன்று 27.09.2005 காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பழைய மாணவர்களையும் நிர்வாக சபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
யாழ். இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.

(சி-45314)(30-11-18)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.27

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் மாதாந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு உதவி அரச பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைஉதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், கூட்டுறவு பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ஒ-12)


## தேவை

பருத்தித்துறையில் ஐயனார் வீதியில் இயங்கும் MARINE WEALTH நிறுவனத்தின் அலுவலகத்திற்கு ஒய்வூதியம் பெறும் கணக்கு ஆய்வாளரும் A/L படித்த பெண் உதவிக் கணக்காளரும் தேவைப்படுகின்றனர். உடன் தொடர்புகொள்ளவும்.

(40491)

Tel: 021 226 3789, 077 3014542

மரையின் வெல்த்,
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.


## — நினைவலைகள் —

| இரகுநாதன் சிவானந்தராசா | சிவானந்தராசா நவந்தினி (2ஆம் லெப். ஆதித்தா (அங்கவை) |
|---|---|

02.04.1938 -: தோற்றம் :- 08.03.1980
06.09.1980 -: மறைவு :- 27.09.1998

இதயத்தில் இருப்பவன் இல்லையென்றிடில் ஏக்கம் பிறக்காதோ?
அவன் இதயத்தில் இருப்பதை உணரமுடிந்தால் இறப்பு இருக்காதோ?
ஆசை என்ற சொல்லிலே ஆயிரம் துயர்வரும்,
பாசமென்ற உணர்விலே பற்றுமோர் பிணைவரும்
உறவு என்ற பெருவலையில் உபத்திரமோ நிறைய உண்டு
உணர்ந்து கொண்ட உன் செயலை உணர்கின்றோம்.
நாம் இப்போ என்றென்றும் உங்கள் நினைவுடன்...

188, கந்தபுரம்,
கிளிநொச்சி.
(சி-45317)
குடும்பத்தினர்.


**ராஜா** யாழ்ப்பாணம்
28 வரை நியூ புகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த
**அன்பே ஆருயிரே**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
29 முதல் சூர்யா அஸின் நடித்த
கஜினி

**மனோகரா** யாழ்ப்பாணம்
சிம்பு, கோபிகா நடித்த
**தொட்டி ஜெயா**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
(சி-44110)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
மணிகண்டன், சிம்ரன்,
ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
**கிச்சா வயது 16**
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
வெகு விரைவில் சாணக்கியா

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
ஸ்ரீகாந், சோனியா அகர்வால் நடித்த
**ஒருநாள் ஒருகனவு** (சீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)


## விளையாட்டு விழா

தொல்புரம் மேற்கு செல்வா முன்பள்ளி விளையாட்டு விழா இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

ஞா.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் லயன்.ச.கனகராசனும் சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன், ஆசிரியர் திருமதி பா.விஜயராணி, சமுர்த்தி உத்தியோகத்தர் க.சிவகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-28-203)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.27

வட்டுக்கோட்டைப் பகுதிகளில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட சொந்தக் காணிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் நல்லினத் தென்னங்கன்றுகளை வழங்கவுள்ளனர்.

இந்தத் தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சித்தன்கேணி வட்டுக்கோட்டை வீதியில் அமைந்துள்ள லயன்ஸ் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் ச.கனகரசன் தெரிவித்துள்ளார். (ஒ-203)

## மோ. சைக்கிள் விபத்து; மூவர் படுகாயம்!

கரவெட்டி, செப்.27

மோட்டார்சைக்கிள் மதிலுடன் மோதியதில் அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்தனர்.

புலோலியைச் சேர்ந்தவர்களான பாபு நிரோஜன் (வயது-14), தியாகுராஜா (வயது-15), அப்புகுட்டி (வயது-16) ஆகிய மூவரும் நேற்றுமுன்தினம் மோட்டார்சைக்கிள் செலுத்திப் பழகினர் என்றும் அவ்வேளையில் மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் மூவரும் படுகாயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர் நிரோஜன், ராஜா ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(ஒ-70)

### ஒன்றுகூடல்

பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் புனரமைப்புக் குறித்த ஒன்று கூடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

(204-28)

## கண்ணீர் அஞ்சலி



### பொன்னையா ஆறுமுகராசா

எமது ஆனைக்கோட்டை உபதபாலகத்தில் தபால் ஊழியராக பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பொன்னையா ஆறுமுகராசா அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(40492)(29-17-15)

உபதபாலதிபரும் தபால் ஊழியர்களும்
ஆனைக்கோட்டை.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| அவதாரம் | | அமரரானது |
|---|---|---|
| 10 - 02 - 1956 |  | 12 - 09 - 2005 |

### அமரர் N.R.K.வசந்தகுமார்

கடந்த 12.09.2005 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரும் அமரர்N.R. கோவிந்தசாமியின் சிரேஷ்ட புத்திரனுமாகிய அமரர் N.R.K.வசந்தகுமார் (நாதஸ்வர வித்துவான்) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வேளை தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(40485)(29-17-15)

கந்தசாமி கோயிலடி, இணுவில். -குடும்பத்தினர்.

## 18ஆவது ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 - 07 - 1947 |  | 16 - 10 - 1987 |

அமரர்

### கந்தசாமி சண்முகநாதன் (பேபி)

(முன்னாள் பாலா ஸ்போட்ஸ் கிளப் உரிமையாளர்)

"வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி
எம்மை வாழ வைத்த தெய்வமே!
புதுமுகம் பல வந்து சென்றாலும்
உங்கள் முகம் என்றுமே மறையப் போவதில்லை"

(40487)(29-17-15)

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
-ரஞ்சன் குடும்பத்தினர்.

## ஒரு வருட நினைவுகளில்



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 - 05 - 1980 |  | 08 - 10 - 2004 |

### அமரர் சேனாதிராஜா முகுந்தன்

எம்முடன் குழாவி மகிழ்ந்து இன்புறும் முகுந்தா - நீ
எம்மை விட்டுப் பிரிந்து இன்று வருடமொன்றானதோ?
நினைக்கவில்லை நாம் நிஜவாழ்வில் எமைவிட்டு பிரிவாயென்று - உனை
நினைத்தே நிதமும் எம் இதயம் கலங்குகிறது
நண்பர்களாய் மகிழ்ந்திருந்த எமை விட்டுப் பிரிய
நண்பா உனக்கு மனம் வந்ததுவோ.

(சி-45316)

கஸ்தூரியார் வீதி நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி



ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி அவர்கள் 23.09.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சோதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (கார்க்கார மணியம்) அன்பு மனைவியும் சிவகுமார், சிவரூபன், சிவசீலன், சிவராஜ், ரஜனி, சுபாசினி, சுகந்தினி (U.N.HABITAT) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி, மாலினி, கோமளாதேவி, பகீரதி, மதிரூபன்(UNHCR), விபுலேந்திரன், சிவகுமாரன் (OWNERYARL MOBILES THIRUNELVELY) ஆகியோரின் அன்பு மாமியும் தவமணிதேவி, சித்திராதேவி, ஆனந்தராசா, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, நாகம்மா, நீலாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சஜீந், சுஜீத், ரஜீத், துஷ்யந்தன், துவாரகா, நிஷாந்தன், பிரஷீந்தன், நர்ஷிகா, நிவேகா, காயத்திரி, அபிரா, சுவேஸ்திகன், வினோஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2005) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40493)(29-17-15)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# எம்மிடம் இருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிப் பாதுகாப்புத் தருகின்றோம் என்று எமை அழைத்து எமது அப்பாவிப் பிள்ளைகளை வருடக்கணக்காக மறைத்துவைப்பது நியாயமான காரியமா?

கைதுசெய்யப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை காலமும் நீங்கள் ஏன் வெளிப்படுத்தவில்லை.

1997ஆம் ஆண்டு இறுதியில் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமாகிய டக்ளஸ் தேவானந்தாவுடன் நாம் உங்களை வந்து சந்தித்தபோது 16 பேர் மட்டும்தான் உயிருடன் இல்லை. ஏனையோர் பற்றிய விடயங்களுக்கு நான் பொறுப்பு என்று கூறினீர்கள் நீங்கள் கூறி இன்று பத்து வருடங்கள் ஆகின்றபோதும் எதுவித நடவடிக்கைகளும் நீங்கள் மேற்கொண்டதாக எமக்குத் தெரியவில்லை. உங்களுடைய வார்த்தைகளை நம்பி எமது பிள்ளைகள் வருவார்கள் என வழிமேல் விழி வைத்து ஏங்கியிருந்த எமது நெஞ்சங்களில் நீங்கள் பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டு விட்டீர்கள். எமது பிள்ளைகளுக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் எடுக்கும்படி அறிவித்துள்ளீர்கள்.

நீங்கள் அரசியல்வாதியாக இருந்த காலத்தைவிட அதிககாலம் தாரமாகவும் தாயாகவும் இருந்துள்ளீர்கள். ஒரு பெண் கணவனை இழந்து தவிப்பது அப்பெண்ணின் மனநிலையை எவ்வாறு பாதிக்குமென்பதை நீங்களும் அனுபவத்தால் உணர்ந்துள்ளீர்கள். பிள்ளைகளை இழந்தால் பெற்றதாய் எவ்வளவு வேதனையை அனுபவிப்பாள் என்பதும் உங்களுக்கு விளங்கும் என எண்ணுகின்றோம்.

உங்கள் அரசின் பாதுகாப்புப் படையினரால் எமது பிள்ளைகளை கைதுசெய்ய அதிகாரத்தை வழங்கியது யார்? எமது பிள்ளைகள் எவரையாவது கொலை செய்தார்களா? அல்லது கற்பழித்துள்ளார்களா? கைதுசெய்யப்படுகின்றபோது கையில் குண்டுகளோ துப்பாக்கியோ வைத்திருந்தனரா?

எமது இளம்பிள்ளைகளை எம்மிடம் இருந்து பிரித்ததன் மூலம் முழுத் தமிழ்த்தேசிய இனத்தையும் அழித்துவிட முடியாது என்பதை மனக்குமுறலுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் - என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# இன்று நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புகிறார்.

இவ்வாரம் கொழும்பில் கட்சியின் முக்கியமான பிரமுகர்களை அழைத்து கலந்துரையாடவுள்ள ஜனாதிபதி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்சி முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களை இக்கூட்டங்களில் ஆராயவுள்ளார்.

நாடு திரும்பியதும் ஜனாதிபதி எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் ஆளும் கட்சிக்குள் பல நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும் என அவதானிகள் கூறுகின்றனர். (க)



தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் நினைவு தின நிகழ்வு கிளிநொச்சி நகர சபைத் திடலில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன் றிலில் இருந்து திருவுருவப்படம் ஊர்வலமாக நகரசபைத் திடலுக்கு எடுத்துவரப்படும் காட்சி இது.

# கட்டுநாயக்காவில் 12 தமிழர்கள் கைது!

இலங்கையிலிருந்து போலி பயண ஆவணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல முயற்சித்த 5 பெண்கள் உட்பட 12 தமிழர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மாலைதீவு நாட்டவர்களின் கடவுச் சீட்டுகளை திருத்தி அதன்மூலம் இவர்கள் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் பதவியிலிருந்து, நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தம்மை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை கட்சியின் யாப்பு விதிகளுக்கு மாறானது; சட்டவிரோதமானது எனத் தெரிவித்து இந்த வழக்கை ஆனந்த சங்கரி தாக்கல் செய்திருந்தார்.

2003 நவம்பர் 30ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் செல்லுபடித் தன்மையை இந்த வழக்கில் ஆட்சேபித்திருந்தார் ஆனந்தசங்கரி.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், எதிர் மனுதாரர்களுக்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை விடுத்திருந்தது. வழக்கு விசாரணை முடிவடையும்வரை கட்சித் தலைவர் ஆனந்தசங்கரியின் இசைவின்றி கட்சியின் கூட்டங்களைச் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் கூட்டக் கூடாது என அந்த உத்தரவில் பணிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த ஜூன் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது அந்தத் தினத்தில் மனுதாரர் வீ.ஆனந்தசங்கரி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருப்பதற்கான மருத்துவச் சான்றிதழ் ஒன்று பின்னர் தாக்கல்செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பத்து நாள்களுக்கு அவர் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெறவேண்டும் எனக் குறிப்பிட்டு ஜூன் 5ஆம் திகதியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அந்த மருத்துவச் சான்றிதழ் லண்டன் வைத்தியசாலை ஒன்றில் பெறப்பட்டிருந்தது. ஆனால், வழக்கு ஜூன் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் ஆனந்த சங்கரி கொழும்பில் தங்கியிருந்து தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், வழக்குத் தினத்தில் வெளிநாட்டில் அவர் சிகிச்சை பெற்றார் எனக் கூறப்படுவது தவறு என்பதை உறுதிப்படுத்த அவரது கடவுச்சீட்டைப் பரிசீலிக்கும்படியும் நேற்று நீதிமன்றத்தில எதிர்மனுதாரர்கள் சார்பில் கோரப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், அவரது கடவுச்சீட்டைப் பரிசீலனைக்கு அடுத்த தவணையின்போது சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டது.

முன்னதாக, மேலதிக மாவட்ட நீதிபதி கே.எச்.சுமித்ரபால முன்னிலையில் இவ் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆரம்பத்தில் மனுதாரர் ஆனந்தசங்கரி நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவரை நீதிமன்றுக்குக் கூட்டிவர முடியாமல் இருப்பதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். ஆனால், நீதிமன்றில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றப் பதிவாளர் தெரியப்படுத்தியிருப்பதால் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகலாம் என நீதிபதி உத்தாவிட்டார்.

இதனையடுத்து, ஆனந்த சங்கரி பலத்த பாதுகாப்போடு நீதிமன்றத்துக்குக் கூட்டிவரப்பட்டார். அவரது சாட்சியம் நேற்று நெறிப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கை விரைந்து விசாரித்து முடிக்கவேண்டும் என எதிர்மனுதாரர்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

''நீதிமன்றின் இடைக்காலத் தடை காரணமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி செயற்பட முடியாமலுள்ளது. இதனால் கடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி போட்டியிட முடியாமற்போனது. இக்கட்சியினர் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட நேர்ந்தது.''- என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வீ.ஆனந்தசங்கரி தாம் அளித்த சாட்சியத்தில 2003 நவம்பர் 30ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் கூட்டம் குறித்துத் தெரிவித்தார். அந்தக் கூட்டப் பதிவு தொடர்பான ஆவணத்தை அந்தக் கூட்டத்தின் போது தாம் பறித்துக் கிழித்தார் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். அந்த ஆவணத்தில் தமக்கு ஆதரவாக ஒப்பமிட்டவர்களின் விவரங்கள் விடுதலைப் புலிகளின் கைகளுக்குக் கிடைத்துவிட்டால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதியே அந்த ஆவணத்தைத் தாம் பறித்துக் கிழித்து எறிந்தார் என்றும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

''வடக்கு, கிழக்கிலிருந்து படைகள் பழைய நிலைமைகளுக்கு வாபஸ் பெறப்படவேண்டும் எனக் கோரப்பட்டது. அப்படிக் கேட்டால் ஆனையிறவை மீள ஒப்படைக்கும்படி அரசுப் படைகள் கேட்குமே என்று நான் கூறினேன். அதைத் தவறாக விளங்கிக் கொண்டு, நான் ஆனையிறவை மீள அரசுப் படைகளிடம் ஒப்படைக்கும்படி கோருகிறேன் எனப் பிரசாரம் செய்து எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டது. அப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது கட்சி யாப்புக்கு முரணானது.''- என்று தமது சாட்சியத்தில் தெரிவித்தார் ஆனந்த சங்கரி.

வழக்கு விசாரணை நவம்பர் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி கபில லியன கமகே ஆஜராகி மனுதாரரின் சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையோடு, சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.பிரபாகரன் ஆகியோர் ஆஜரானார்கள். (க)

# கைதான போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அலுவலக அதிகாரிகள் நேற்று பார்வையிட்டனர்.

கடந்த 13ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்பகுதியில் வைத்து அவசர கால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தப் போராளியை பொலீஸாரின் வேண்டுகோளின் பேரில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் பார்வையிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-13)

# இந்திய முறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யும் பல அம்சங்கள் அமைந்திருக்கின்றன எனத் தெரிகிறது.

✱ அமைதிப் பேச்சுகளில் முஸ்லிம்களுக்குச் சுதந்திரமானதும், தனியானதும், சுயாதீனமானதுமான தரப்பை உறுதிப்படுத்துதல்.

✱ ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளை நிவர்த்திசெய்யும் வகையில் உரிய இடம் உறுதிசெய்யப்படும்.

-ஆகிய இரு அம்சங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒஸ்லோ இணக்கப்பாடு மற்றும் டோக்கியோப் பிரகடனம் ஆகியவற்றின் அடிப்படையில் சமஷ்டி முறையின் கீழ் நிலையான - நிரந்தரமான - தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்வது பற்றி இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் பிரஸ்தாபிக்கின்றது.

அதேசமயம், இந்தியாவில் உள்ள அரசியல் முறைமைகளின் கீழ் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்படும் என அதில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வளவு நீண்ட, அரசியல் செயற்பாடுகளுக்குப் பின்னரும் தீர்வுக்கான வழிமுறை குறித்து திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை எடுக்காமல் ஒஸ்லோ இணக்கம், டோக்கியோ பிரகடனம், இந்திய முறைமை என பல விடயங்களையும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்து, அதில் தெளிவில்லாத ஒரு குழப்ப நிலையை ஐ.தே.க. ஏற்படுத்த இருப்பது குறித்துத் தமிழர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

# வடக்கு - கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இங்கு தெரிவித்திருக்கிறார்

வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் மக்கள் நிர்வாகம் சிறிதளவாவது மலர்வதற்கும், ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இது ஓரளவு உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாணசபை ஆட்சிமுறையானது சிங்கள மக்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே, வடக்கு - கிழக்கிலும் இந்த மாகாண சபை ஆட்சிமுறைக்கு புத்துயிர் அளிப்பதன் மூலம் அதனை நடைமுறைச் சாத்தியமாக்கலாம். இதுவே சாத்தியமான அணுகுமுறையாகும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் கூட ஒற்றை ஆட்சி அரசமைப்பு முறைக்கு பங்கம் ஏற்படாமலே அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை உடையனவாகவே இருக்கின்றன. ஜனாதிபதி வேட்பாளரான பிரதமரும், இவர்களுடன் ஒத்துப்போகும் உடன்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார். எனவே, தேர்தலில் வெற்றிபெற்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆட்சிமுறை நிர்வாகத்தை மலரச்செய்து, இடைக்காலத் தீர்வொன்றை காணுவார் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். - என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வு கூறியிருக்கிறார்.

வடக்கு - கிழக்கின் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே மாகாணசபை நிர்வாகம் இயங்கக் கூடியதாக இருக்கும் என்று சொன்ன அமைச்சர், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை கண்டறிவதற்கான முதல்படியே மாகாணசபை நிர்வாகத்துக்கு புத்துயிர் கொடுப்பதாகும் என்றார்.

இரண்டாவது படி தற்போதைய ஒற்றை ஆட்சி அரசமைப்புக்குள் பெறக் கூடியளவு அதிகார பரவலாக்கலை வலிந்து பெறுவதாகும்.

மூன்றாவது கட்டமே ஒற்றை ஆட்சி அரசமைப்பை புதிய சமஷ்டி ஆட்சிமுறை அரசமைப்பாக மாற்றுவதாகும் என்றும் விளக்கமளித்திருக்கிறார். (ஒ-க)


A/L தமிழ் DAY 06
புதிய பிரிவு II
நாகூ.தமிழ்ந்திரன்
செவ்.வியா. - 2.30 - 4.00 (ப.நே.)
ஆரம்பம்: 29.09.2005
வியா. 2.30 p.m. (40467)
Note: இதுவே இறுதிச் சந்தர்ப்பம்
BEACON யாழ்நகர்

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 01.10.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

கலை, வர்த்தகத்திற்கு தன்னிகரில்லா தனித்துவமான ஒரே நிறுவனம்
பிரிவு 2
விக்னா கல்வி நிறுவனம்
A/L DAY CLASS 3/10/05 8.30
Acc. திரு.பாலவாசன் Eco. திரு.உதயன்
B.St. திரு.பூரணி
Tam. திரு. குழந்தை H/C. திரு.ஜெயக்குமார்
Log. திரு.ஜெயந்தன் Geo. திரு. பாபு
Hin. திரு. N.T. தரன் Chri. திரு. வசந்தன்
P/Sci. திரு.ஜொய்சன் Hist. திரு.பத்மன்
Drama. திரு.ரமேஸ்
(40483)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பிரிவு 3 மிகவிரைவில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.